بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ


**06** முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

**08** எது முதலில்?

**11** பொள்ளாச்சியில் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னனி என்ன?
புத்தக அறிமுக விழா

**13** கல்விக்கண் திறந்த இஸ்லாம் கல்வியாளர்களின் கண்களைத் திறக்கட்டும்

**19** +2 படித்தவர்கள் என்ன படிக்கலாம்?
கல்வி சிறப்பு கண்ணோட்டம்

**50** 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?
புத்தக அறிமுக விழா

**57** என்னைத் கொலை செய்ய ....?


இன்ஷா அல்லாஹ்.
முஸா கூறினார். “கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாள் மீது நம்பிக்கை கொள்ளாத, பெருமையடிக்கும் எல்லோரையும் விட்டு, என்னுடைய இறைவனாகவும், உங்களுடைய இறைவனாகவும் இருப்பவனிடம் நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்.”
(அல்குர்ஆண் : 40:27)


மே – 2015

# வைகறை வெளிச்சம்

ரஜப் –1436

தனி இதழ் : ரூ. 20/–
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240/–
வெளி நாடு : ரூ. 1500/–
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts.Privet circulation to promote the original issue



VAIGARAI VELICHAM
52/1, Mannady Streetï Room No.7,
Mannady, Chennai 600 001.
Tel 044 25224887
E-Mail: darultrust@yahoo.com
Web: www.darulislam.in

http:/www.facebook.com/vaigaraivelicham

தலையங்கம்



# ஆட்சியாளர்களும் ஆடையும்

05



# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

## விஞ்ஞானிகளைத் தேடித் தேடிக் கொலை செய்தது கிறிஸ்தவம்

அபுல்ஹசன் அலீ நத்வீ

மொழிபெயர்ப்பு
அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

**மதகுருமார்கள் மதநூலுக்குச் செய்த துரோகம்**

ஐரோப்பாவிலிருந்த மத குருமார்கள் தமக்கும் தாம் கடைப்பிடித்து வந்த மார்க்கத்துக்கும் மாபெரும் துரோகம் ஒன்றைச் செய்தார்கள்.

தம்முடைய வேத நூல்களில் அன்றைய மனித அறிவுக்கு உட்பட்ட தகவல்களையும் வரலாறு, பூகோளம், விஞ்ஞானம் இவற்றில் தங்களுக்குத் தெரிந்த தகவல்களையும் சேர்த்தார்கள்.

அப்போதைய காலத்தில் வரலாறு, புவியியல் விஞ்ஞானம் இவை பற்றி அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான். அக்காலத்தில் அவை தான் இறுதித் தகவல்கள் அவற்றில் யாரும் ஐயங்களை எழுப்பக்கூட மாட்டார்கள் என்ற அளவுக்கு அவை உறுதியான தகவல்களும் கூட.

ஆனால் வளர்ந்து கொண்டேயிருப்பது தானே மனித அறிவின் யதார்த்தம். அது எந்தக் காலத்திலும் அப்படியே தேங்கி நின்றதில்லை. ஒரு காலத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முடிவு பின்னொரு காலத்தில் மாற்றம் காணாது என்று சொல்வதற்கில்லை. மனித அறிவு படிப்படியாக வளர்ந்து கொண்டே செல்லும்.

எனவே மனித அறிவுகளின் மேல் மதங்களைக் கட்டி எழுப்பினால் அது மணல் மேல் கட்டப்பட்ட வீடுதான்.

அன்றைய ஐரோப்பியப் பாதிரிகள் தமது வேதங்களில் இணைத்த கைச்சரக்குகள் மிக நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்டவைகளாக இருக்கலாம்.

ஆனாலும் அவர்கள் தமக்கும் தமது மதத்துக்கும் பெரும் துரோகம் செய்து விட்டார்கள் என்பதே உண்மை.

ஏனென்றால் இவர்கள் தமது வேதத்தில் திணித்த தகவல்கள் பின்னர் விஞ்ஞானத்துடன் முரண்பட்டன. மதமும் விஞ்ஞானமும் மோதிக் கொண்டன.

இதில் மதம் பரிதாபமாகத் தோற்றது. மதகுரு மார்களின் ஆதிக்கம் வீழ்ந்தது. பின்னர் பழைய கீர்த்தியையும் கித்தாப்பையும் அவர்களால் பெறவே முடியவில்லை.

இந்தத் தோல்விக்குப் பின் நடந்தவை

இன்னும் மோசமானவை. ஐரோப்பா முழுவதும் மதத்தை எதிர்ப்பவர்கள் தலையெடுத்தார்கள். தழைத்து வளர்ந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் நாத்திகவாதிகளாகவே ஆகிவிட்டார்கள்.

அத்தோடு நின்றார்களா ஐரோப்பியப் பாதிரிகள்? இல்லை!

இன்னும் சில தகவல்களையும் பொது மக்களின் நாவுகளில் நடமாடும் விஷயங்களையும் வேதங்களில் திணித்தார்கள்.

பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகியவற்றுக்கு விரிவுரை விளக்கம் என்ற பெயரில் சிலர் சொன்ன பூகோளம், வரலாறு, பௌதீகம் ஆகீய விஞ்ஞானத் தகவல்களையும் வேதத்தில் திணித்து வேதத்துககு புதுச்சாயம் பூசினார்கள்.

இறைவனின் வார்த்தைகளுக்கு தந்த மரியாதையை திணிக்கப்பட்ட தகவல்களுக்கும் தந்தார்கள். இவை மத நம்பிக்கை இதை மறுக்கக்கூடாது என்றார்கள். நம்பித்தான் தீர வேண்டும். இதற்கு எதிரானவற்றைப் புறந்தள்ள வேண்டுமென்றார்கள்.

ஐரோப்பிய பாதிரிகள் இது குறித்து நூல்களையும் உரைத் தொகுப்புகளையும் வெளியிட்டார்கள். அவற்றை "கிறிஸ்தவ பூகோளம்" என்று அழைத்துக் கொண்டார்கள். இவைதான் சரியானவை. மற்றவையெல்லாம் தவறானவை என அடம்பிடித்தார்கள்.

இவற்றை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கிறிஸ்தவத்தை விட்டே வெளியேறியவனாவான் என்று பிரகடனம் செய்தார்கள்.

**அறிவியலுக்கு எதிரான தேவலாயங்களின் அடக்குமுறை**

ஐரோப்பாவில் பகுத்தறிவு, சிந்தனை வளரத் தொடங்கிய காலத்தில் நடந்தவை அவை.

விஞ்ஞானிகள் கண்மூடித்தனமான மத அனுஷ்டானங்களை எதிர்த்தபோது நடந்தவை.

அந்த விஞ்ஞானிகள் மத அனுஷ்டானங்களை மட்டுமல்ல கிறிஸ்தவ பூகோளத்தை (Christian Geography)யும் விமர்சித்தார்கள். அதில் கூறப்பட்டிருந்த தத்துவங்களை உடைத்தார்கள்.

அவை அறிவுக்கு ஒவ்வாதவை எனவே அவற்றை ஏற்க இயலாது என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்தார்கள். எங்களுடைய விஞ்ஞான முடிவுகளை நீங்கள் ஏற்பது குறித்துச் சிந்தியுங்கள் என்றார்கள் விஞ்ஞானிகள்.

இந்தக் கோரிக்கை தேவாலயங்களை உசுப் பேற்றியது. மதத் தலைவர்கள் இந்த விஞ்ஞானிகளை மதத்தை எதிர்ப்பவர்கள் என்றும் கடவுளை ஏற்க மறுப்பவர்கள் என்றும் தூற்றினார்கள்.

இந்த மத மறுப்பாளர்களை எப்படி தண்டிக்கலாம் என்று முடிவெடுக்க தேவாலயங்கள் மத நீதிமன்றங்களை நிறுவின.

அந்த (Inguisition Court) மத நீதிமன்றம் அவர்களின் செல்வங்களையும் உயிர்களையும் பறித்திட வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

போப் அவர்களின் மொழிகளில் சொன்னால் "அந்த நாத்திகர்கள் மதமறுப்பாளர்கள் நகர்ப் புறங்களிலும் வீடுகளிலும் காடுகளிலும் குகைகளிலும் விவசாய நிலங்களிலும் மலைப்பொதும்புகளிலும் வாழும் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்".

இந்த மதநீதிமன்றங்கள் கண்ணிமைக்காமல் முனைப்புடன் பணியாற்றின. விரைந்து செயல்பட்டன. தேவாலயங்களின் கருத்துக்களுக்கு முரணாகச் சிந்திப்பவன் ஒருவன் கூட கிறிஸ்தவ உலகில் இருக்கக்கூடாது என்ற வெறியுடன் செயல்பட்டன.

எட்டுத்திக்கிலும் ஒற்றர்களை உலவ விட்டார்கள். மக்கள் மூச்சு விட்டால் கூட அதைக் கண்காணிக்கச் சொன்னார்கள். ஒரு சிறு அசைவையும் கூர்ந்து ஆராய்ந்தார்கள். விஞ்ஞானிகள் அனைவரையும் கிறிஸ்தவத்தின் எதிரிகள் என்று கூறி தண்டித்தார்கள்.

புதிய கண்டுபிடிப்புகள் புதிய உத்திகள் இவை தென்பட்டால் அவை ஏன் வந்தன? யாரால் வந்தன? நோக்கம் என்ன? என்று அலசி ஆராய்ந்தார்கள்.

இப்படி மிகைத்து நின்ற கெடுபிடிகளைப் பற்றி ஒரு கிறிஸ்தவ வேதியியல் வல்லுநர் இப்படிச் சொல்கிறார்:- “எந்தக் கிறிஸ்தவனும் இயல்பான மரணத்தை அடைய இயலாது” (அதாவது மதநீதி மன்றங்கள் எந்தக் கிறிஸ்த வனையும் தண்டிக்காமல் விடாது உளவுத்துறையின் கண்காணிப்பின் கீழ் கொண்டு அவனை மத மறுப்பாளன் என்று மரணதண்டனை தராமல் விடாது).

இவ்வாறு மத நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டவர்கள் சுமார் மூன்று லட்சம் பேர் என்கிறது ஒரு தகவல். இவர்களில் முப்பத்து இரண்டாயிரம் பேர் உயிரோடு துடிக்கத்துடிக்க எரித்துக் கொல்லப்பட்டனர்.

இப்படி எரித்துக் கொல்லப்பட்டவர்களில் பிரபல இயற்பியல் விஞ்ஞானி புருனோவும் ஒருவர். இவர் செய்த மிகப்பெரும்பாவம் பல்வேறு கோள்கள் இருக்க வாய்ப்புள்ளது’ என்று வாதிட்டதுதானாம்.

இதனால் கோபமடைந்த தேவாலயம் மதநீதி மன்றத்திடம் இவரை ஒப்படைத்தது. அது இவருக்கு மரணதண்டனை விதித்தது. ஒரு சொட்டு ரத்தம் கூட வெளியில் சிந்தாமல் இவரைக் கொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டது.

அதாவது அவரை உயிரோடு எரித்துக் கொல்ல வேண்டுமாம். அப்படியே அவர் கொல்லப்பட்டார்.

இதே போல கலீலியோ (Galilio) என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி. இவர் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று நம்பியவர். கண்டுபிடித்தவர் இவரும் தன் இன்னுயிரைத் துறக்க நேர்ந்தது. மரண தண்டனை வழங்கப்பட்டது.

**கொதித்தெழுந்தார்கள் கண்டுபிடிப்பாளர்கள்**

இப்படி மதநீதிமன்றங்கள் விஞ்ஞானிகளை தண்டித்தபோது ஆய்வாளர்களும் அறிவியலாளர்களும் பொறுமை இழந்தார்கள். பொங்கி எழுந்தார்கள்.

பழைமையைப் பற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும் மதவாதிகளுக்கும் ஆலயங்களுக்கும் எதிராக பகிரங்கமாகப் பேசினார்கள். கிறிஸ்தவத்தின் பெயரால் முன்வைக்கப் பட்ட அனைத்தையும் எதிர்த்தார்கள்.

அறிவியல், விஞ்ஞானம், நம்பிக்கை, ஒழுக்கம் எதுவானாலும் சரி. கிறிஸ்தவம் சொன்னால் ஏற்காதே. நம்ப மறு என்றார்கள் விஞ்ஞானிகள்.

முதலில் கிறிஸ்தவத்தை எதிர்த்தார்கள். பின்னர் எல்லா மதங்களையுமே எதிர்த்தவர்கள். மதங்கள் அனைத்துமே அறிவியலுக்கு எதிரானவை என்றார்கள்.

ஆக கிறிஸ்தவ மதவாதிகளுக்கும் ஆய்வாளர்கள் விஞ்ஞானிகளுக்கும் இடையேயான இந்தப் போர் விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் இடையேயான போராக மாறிவிட்டது.

விஞ்ஞானமும் மதமும் என்றுமே ஒத்துப்போகாத சக்காளத்திகள். அறிவாராய்ச்சியும் மதமும் ஒன்றுக்கொன்று முரணானவையே. அவை சேரவே சேராது.

ஒன்றுக்கு முகம் காட்டினால் மற்றொன்றுக்கு முதுகையே காட்ட வேண்டும். ஒன்றை நம்பினால் மற்றொன்றை நிராகரிக்க வேண்டும் என்று சொன்னார்கள், மதவாதிகளை பழி வாங்க நினைத்தவர்கள்.

மதம் பற்றிய பேச்சு வந்தாலே அறிவாராய்ச்சிக் காகவும் உண்மைக்காகவும் உதிரம் சிந்தி உயிரிழக்க வேண்டிய கதிக்கு ஆளான, பாதிரிகளுடைய அரக்கத் தனத்துக்கு பலியான அப்பாவி விஞ்ஞானிகளைப் பற்றியும் மக்கள் பேசினர்.

மதவாதிகள் பற்றிப் பேச்சு வரும்போது கொடூரமுகமும் கலை தெறிக்கும் கண்களும் இறுகிய இதயமும் தான் கண்முன்னே காட்சிகளாக விரிந்தன.

அறிவுத்துறையின் நாட்டம் கொண்டோர் பாதிரி களையும் அவர்கள் காட்டிய வழிகளையும் வெறுத்தார்கள். தம் வழித் தோன்றல்களுக்கும் மதத்தின் மீது வெறுப்பை ஊட்டி வளர்த்தார்கள்.

**ஆராய்ச்சியாளர்கள் ஆத்திரப்பட்டார்கள் அவசரப்பட்டார்கள்**

மதவாதிகளைப் பழிவாங்க வேண்டும் என்று துடித்த ஆராய்ச்சியாளர்கள் நிதானமிழந்தார்கள்.

அவசரப்படாமல் நிதானமாக சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும்.

மதத்தையும் அதை மூர்க்கத்தனமாக முன்னெடுத்த மதத் தலைவர்களையும் ஒன்றாகப் பார்த்து விட்டார்கள். தம் தலைமையைத் தக்க வைப்பதற்காக மதவாதிகள் செய்த அநியாயங்களை மதம் செய்த அநியாயங்கள் என்று எண்ணி விட்டனர்.

பாதிரிகளின் மூடத்தனத்தையும் இரக்கமற்ற கொடூரக் கொலைகளையும் மதம் செய்த பாவமாக கருதி விட்டனர். அவர்கள் நிதானமாகப் பகுத்துணர்ந்து பார்த்திருந்தால் மதத்தை ஏதோ பழத்தின் கொட்டையைத் தூக்கி வீசுவது போல் வீசியிருக்க மாட்டார்கள்.

மதவாதிகளின் அக்கிரமம், தீவிரப் போக்கு, கோபம், வெறி இவையெல்லாம் மதத்திலுள்ள (நல்ல) விஷயங்களைச் சிந்திக்கவும் விடவில்லை. மதத்தை சகித்துக் கொள்ளவும் விடவில்லை. நிதானமாக சிந்திக்கவும் விடவில்லை.

பெரும்பாலான நாடுகளில் பெரும்பாலான காலக்கட்டங்களில் புரட்சியாளர்கள் இப்படித்தான் இருந்து விடுகிறார்கள்.

இவர்களிடம் உண்மையான தேடலும் இல்லை. தமக்கும் தம் சமுதாயத்துக்கும் நலன் பயக்கும் ஒரு வழிகாட்டுதலை ஒரு கொள்கையை, திறந்த மனதுடன் தேடியிருப்பார்களானால் இஸ்லாத்தை ஏற்பது பற்றி சிந்தித்திருப்பார்கள்.

அப்போதைய அறியப்பட்ட உலகில் பல்வேறு சமுதாயங்கள் இஸ்லாத்தை தம் வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்ந்து வந்தனர். அந்த மார்க்கம் இந்த சங்கடங்களிலிருந்தெல்லாம் அவர்களை மீட்டிருக்கும்.

அம்மார்க்கம் நன்மையை ஏவி தீமையை விலக்குகிறது. தூயதை அனுமதிக்கிறது. தீயதை தடுக்கிறது. அவர்களின் பாரங்களை நீக்குகிறது. அவர்களைப் பிணைத்திருக்கும் விலங்குகளை உடைத்தெறிகிறது.

**ஏன் அவர்கள் இஸ்லாத்தை ஏற்கவில்லை?**

ஆனால் என்ன செய்வது! அவர்களுக்கு அஞ்ஞானத்தின் மீது இருந்து பிரிக்க முடியாத பாசம் கிறிஸ்தவ மேற்கத்திய நாடுகளுக்கும் கிழக்கித்திய இஸ்லாத்துக்குமிடையே நடந்த சிலுவைப்போர்கள் ஏற்படுத்தியிருந்த தடைகள் இஸ்லாத்துக்கும் பெருமானார் (ஸல்)க்கும் எதிராக கிறிஸ்தவ பாதிரிகள் செய்து வைத்திருந்த துர்ப்பிரச்சாரம் உண்மை மார்க்கத்தைக் கண்டறிவதில் நாட்டமின்மை மறுமை வெற்றி குறித்த ஆசையின்மை மரணத்தின் பின்னர் வரும்

வாழ்வு குறித்த அக்கறையின்மை ஆகிய காரணங்களால் அவர்கள் இஸ்லாத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

மேலும் முஸ்லிம்களும் இஸ்லாத்தை ஐரோப்பாவில் பரப்பவுமில்லை. அதற்கு முயற்சிக்கவுமில்லை. இவை யெல்லாம் அவர்களை இஸ்லாத்தின் பக்கம் திரும்ப விடாமல் தடுத்த காரணங்கள்.

தேவையான நேரத்தில் தேவையான ஒரு மார்க்கத்தை அவர்கள் தேர்ந்தெடுக்க முடியாமல் போனதற்குரிய காரணங்கள் இவை.

தொடரும்...

தமிழ் வடிவம்:- இல்யாஸ்ரியாஜி

# எது முதலில்?



இமாம்: யூசுப் அல்கர்ளாவீ

# மனோ இச்சைகள்

"அத்தகையோரின் இதயங்களில் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான். அவர்கள் தம் மனம் போன போக்கில் சென்றனர் (47:16) என்றவாறு ஒரு சமுதாயத்தைப் பழிக்கிறான் அல்லாஹ்.

பின்வரும் வசனத்தைப் பாருங்கள்.

"தன் மனோ விருப்பங்களையே தம் தெய்வமாக ஆக்கிக் கொண்டவனைப் பார்த்தீர்களா? (நேர்வழி எதுவென்று) அவன் அறிந்திருந்தும் அல்லாஹ் அவனை வழி கேட்டில் விட்டு விட்டான். அவனது காதுகள் மீதும் இருதயத்தின் மீதும் முத்திரையிட்டு அவனது பார்வை மீது திரை போட்டு விட்டான். அல்லாஹ்வுக்குப் பிறகு வேறு யார் அவனுக்கு நேர்வழி காட்டப் போகிறார்கள்? நீங்கள் சிந்தித்து உணர வேண்டாமா?" (45:23)

இந்த வசனம் நமக்குச் சொல்வதென்ன? மனம் போன போக்கில் போவது அவனை உண்மையைப் பார்க்க முடியாத குருடனாக உண்மையைக் கேட்க முடியாத செவிடனாக ஆக்கி விடும். அவன் இதயத்திலிருக்கும் அகப்பார்வை நீர்த்துப் போய் விட்டதால் உண்மை எதுவென்று அறிந்திருந்தாலும் கூட அவன் வழி கேட்டிலே தான் இருப்பான். இதுவே இவ்வசனம் சொல்லும் செய்தி.

எனவே தான் இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள். "பூமியில் வணங்கப்பட்டு வரும் (போலி) தெய்வங்களில் மிக மோசமானது மனோ இச்சையே?

மனம் போன போக்கில் போகாதவன் தான் சொர்க்கம் செல்ல முடியும் என்று திருக்குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்.

"யார் தம் இறைவனுக்கு முன் நிற்பதை அஞ்சி மனதை இச்சைகளை விட்டு விலக்கிக் கொண்டாரோ நிச்சயமாக அவருக்கு சொர்க்கம் தான் தங்குமிடம்." (79:40, 41)

இதுவும் மனதில் விளைந்து வரும் பாவம் தானே?

**பொறாமை வெறுப்புணர்வு**

ஆதம் (அலை) அவர்களின் இரு மகன்களுக்குமிடையே நடந்த பிரச்சனையை நமக்கு திருக்குர்ஆன் உள்ளால் உள்ள படியே எடுத்துரைக்கிறது.

உடன்பிறந்த அவ்விரு சகோதரர்களில் தீயவர் நல்லவரைக் கொலையே செய்து விட்டார். அவரைத் தூண்டியது எது? பொறாமை தான் இதோ அந்த வசனங்களைப் படியுங்கள்.

"(நபியே) ஆதமுடைய இரு புதல்வர்களின் உண்மை வரலாற்றை அவர்களுக்கு எடுத்துரைப்பீராக!

அவ்விருவரும் (குர்பானி) கொடுத்த போது ஒருவரிடமிருந்து அது ஏற்கப்பட்டது. மற்றொருவரிடமிருந்து ஏற்கப்படவில்லை. (பின்னவர், முன்னவரிடம்) "நான் நிச்சயமாக உன்னைக் கொலை செய்து விடுவேன்" என்று கூறினார். அதற்கு (முன்னவர்) "மெய்யாகவே அல்லாஹ் பயபக்தியுடையோரிடமிருந்தே (குர்பானியை) ஏற்பான்" என்றார்.

மேலும் "நீ என்னைக் கொல்வதற்கு என்னை நோக்கி உன் கையை நீட்டினால் நான் உன்னைக் கொல்வதற்கு உன்னை நோக்கி என் கையை நீட்ட மாட்டேன். ஏனெனில் நான் அகிலங்களின் இறைவனாம் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்" என்றும் கூறினார்.

என்னுடைய பாவத்தையும் உன் பாவத்துடன் சேர்த்து நீ சுமந்து வருவாய். எனவே நீ நரகவாதிகளில் ஒருவனாகி விடுவாய் என்றே நான் எண்ணுகிறேன்." இதுவே அநியாயக்காரர்களின் தண்டனை என்றும் கூறினார்.

(இதன் பின்னரும்) அவரின் மனம் தம் சகோதரனைக் கொன்று விடும் படி அவரைத் தூண்டியது. எனவே அவர் அவரைக் கொன்று விட்டார். இதனால் அவர் இழப்புக்குரியவராகி விட்டார்.

பின்னர் தம் சகோதரரின் உடலை எப்படி மறைப்பது (அடக்கம் செய்வது) என்பதை அவருக்குக் காட்டுவதற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான். அது பூமியைத் தோண்டியது. (இதைப் பார்த்து) அவர் அந்தோ! "நான் இந்தக் காகத்தைப் போல இருக்க வியலாமல் போய் விட்டேனே அப்படியிருந்தால் என் சகோதரரின் உடலைப் புதைந்திருப்பேனே! என்று புலம்பினார். அவர் கவலைப் படுவோரில் ஒருவராகி விட்டார்.(5:27-31)

மேலும் திருக்குர்ஆன் அல்லாஹ் பொறாமைக் காரனின் தீங்குகளை விட்டுப் பாதுகாப்புத் தேடும்படி கூறுகிறான்.

"பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது ஏற்படும் தீங்கை விட்டு பாதுகாப்புத் தேடுகிறேன் என்று நபியே கூறுவீராக.(113:5)

யூதர்களின் பொறாமை பற்றி அல்லாஹ் கூறுகிறான்; அல்லாஹ் தன் அருளை (முஸ்லிம்) அவர்களுக்கு வழங்கியிருப்பதற்காக (முஸ்லிம்) மக்கள் மீது பொறாமை கொள்கிறார்கள்.(4:54)

வேதக்காரர்களில் ஏராளமானவர்கள் உண்மை எதுவென்று அவர்களுக்குத் தெளிவான பின்னரும் தங்கள் மனதில் உள்ள பொறாமையின் காரணமாக நீங்கள் நம்பிக்கை (ஈமான்) கொண்ட பின் காஃபிராக வேண்டுமென்று விரும்புகின்றனர்.(2:109)

நமக்கு முன்னால் உலகில் வாழ்ந்த சமுதாயத்தவர்களிடம் நிலவி வந்த பொறாமை வெறுப்புணர்வு ஆகிய இந்த மாபெரும் நோய்கள் அவர்களின் மார்க்கத்தையே பதம் பார்த்து விட்டது என்று அண்ணல் நபி (ஸல்) கூறி எச்சரித்தார்கள். பாருங்கள்.

"பொறாமை, வெறுப்புணர்வு ஆகிய நோய்கள் உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயத்தவர்களிடமிருந்து உங்களிடம் மெள்ளமெள்ள வந்து விட்டது. வெறுப்புணர்வு சிரைத்து விடும். அது முடியைச் சிரைக்கும் என்று நான் கூறவில்லை. மார்க்கத்தையே சிரைத்து விடும்" என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : சுபைர் (ரழி) நூல் : பஸ்ஸார் மற்றும் திர்மிதி).

"பொறாமையும் ஈமான் எனும் இறை நம்பிக்கையும் ஒரு மனிதனின் உள்ளத்தில் ஒன்றாக இருக்காது" என்றும் நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) (நூல் : இப்னுஹிப்பான், நஸயீ)

"மனிதர்கள் தமக்கிடையே ஒருவர் மற்றவர் மீது கொள்ளாமலிருக்கும் வரை நன்மையிலேயே இருப்பார்கள்" என்றும் நபி (ஸல்) கூறினார்கள்.(நூல் 8 - தபராணீ)

சிக்கந்தர்

இப்படிப்பட்ட கடும் எச்சரிக்கைக்குரிய மோசமான விரைவுகளைத் தருகின்ற இந்தப் பாவங்கள் உள்ளத்தால் செய்யும் பாவங்கலன்றோ!

**சுய நலம்**

உள்ளங்கள் செய்யும் பெரும் பாவங்களின் வரிசையில் அடுத்து நாம் பார்க்கவிருப்பது பேராசையால் விளையும் கருமித்தனம். அதாவது சுயநலம்.

(அரபு பொறியில் இதற்கு "ஷுஹ்ஹு" என்று பெயர் எல்லாம் எனக்கே வேண்டும். வேறு வெறுக்கும் எதுவும் கிடைத்து விடக் கூடாது என்ற எண்ணம்)

ஷுஹ்ஹு என்பதை "பேராசையுடன் கூடிய கருமித்தனம்" என்கின்றனர். அறிஞர்கள் இது செல்வம் தன்னை விட்டுப் போய் விடக் கூடாது என்று இறக்கிப் பிடித்துக் கொள்ளும் (புஹ்ல்) கஞ்சத்தனத்தை விட மோசமானது. ஏனெனில் இவன் (கஞ்சன்) செல்வத்தை மட்டுமே இறுக்கிப் பிடிப்பான்.

சுயநலக்காரன் அப்படியல்ல செல்வம் வேறு வித பலன்கள் எதுவும் எவனுக்கும் கிடைத்து விடக் கூடாது என்று நினைப்பான். இவன் எப்போதுமே ஒரு விதமான பதை பதைப்புடனேயே இருப்பான். நம்மிடமுள்ள எதையாவது யாருக்காவது தர வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ. அப்படி ஏற்பட்டால் நாம் நமக்கென வைத்திருந்ததை இழந்து விடுவோமோ என்ற பதை பதைப்பிலேயே வாழ்வான்.

இதனால் தான் "அல்லாஹ்வைப் புரிந்து கொண்டவன் இப்படிப்பட்ட சுயநலக் காரனாக இருக்க மாட்டான். ஏனெனில் ஈகை, தர்மம் ஆகிய நற்பண்புகள் ஏன் ஒருவனிடம் இல்லாமல் போகின்றன என்றால் தர்மம் கொடுத்து நம்மிடம் உள்ளதெல்லாம் செலவாகிப் போனால் வறுமை வந்து விடுமே என்று அவன் அஞ்சுவதே காரணம் இதுவே அல்லாஹ்வைப் பற்றிய அறியாமை தான்" என்கின்றனர் மார்க்க அறிஞர்கள்.

ஏனெனில் தர்மம் கொடுப்பதால் செல்வம் குறையாது. அது செல்வத்தைப் பாதுகாக்கும் என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்திருக்கிறான். இதை நம்பாதவன் அல்லாஹ்வை அறியாதவனும் அல்லாஹ் நம்பாதவனுமாவான்.

எனவே தான் ஒரு நபிமொழியில் சுயநலமும் ஈமான் எனும் இறை நம்பிக்கையும் ஒரே இதயத்தில் ஒன்றாக இருக்காது. இன்னொன்றை விரட்டி விடும்" என்று பொருள்.

இது பற்றி இன்னும் சில நபி மொழிகளை நாம் பார்ப்போம்.

"சுயநலத்துக்கு அடிபணிவது, மனம் போன போக்கில் போவது தற்புகழ்ச்சி ஆகிய மூன்றும் (அது உடையவனை) அழித்து விடக் கூடியவை என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : அனஸ் (ரழி) நூல் : தபராணீ)

"ஒருவரின் இதயத்தில் சுயநலமும் ஈமான் எனும் இறை நம்பிக்கையும் ஒன்று சேர்ந்து இருக்காது" (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : அஹ்மது, அல்அதபுல் முஃப்ரத்)

(அனைத்தையும்) உரிந்து விடுகின்ற கோழைத்தனம் பதைபதைப்பை ஏற்படுத்தும் சுயநலம் இவை ஒரு மனிதனிடமுள்ள மிகத் தீயவை குணம் (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : அஹ்மது பை ஹகீ)

அநீதி செய்யாமல் விலகி இருங்கள். ஏனெனில் அநீதி மறுமை நாளில் பல இருள்களாகி விடும். சுயநலத்தை விட்டு விடுங்கள். இந்த சுயநலம் தான் உங்களுக்கு முன்னிருந்தவர்களை அழித்தது. தம் உதிரங்களைச் சிந்தும் படி அவர்களைத் தூண்டியது. தடை செய்யப்பட்டவற்றைச் செய்திட அவர்களைத் தூண்டியது.

(அறிவிப்பாளர் : ஜாபிர் (ரழி) நூல் : முஸ்லிம்)

சுயநலம் கூடாது என்று எச்சரிக்கிறேன். உங்களுக்கு முன்னிருந்தோர் அழித்திடக் காரணம் சுயநலமே. அது அவர்களை உறவுகளைத் துண்டிக்கும் படி தூண்டியது. அவர்கள் உறவுகளைத் துண்டித்தனர். கஞ்சத்தனம் செய்திடத் தூண்டியது. கஞ்சர்களாயினர். பாவம் செய்திடத் தூண்டியது பாவிகளாயினர். (அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி) நூல் : அபூதாவூத்)

இப்படிப்பட்ட படு பயங்கர பாவமான 'ஷுஹ்ஹு' எனப்படும் சுயநலம் மனதில் விளையும் பாவமல்லவா?

**மனம் போன போக்கு**

மனிதனை அழிவில் தள்ளும் பாவங்களில் வரிசையில் அடுத்து நாம் பார்க்க விருப்பது மனம் போன போக்கு இதுவும் உள்ளத்தில் விளையும் பாவமே.

இது குறித்த எச்சரிக்கை திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களில் காணப்படுகின்றன.

"மனோ இச்சைப்படி நீர் செல்லாதீர் அது உம்மை இறைவனின் பாதையை விட்டு திசை திருப்பி விடும்" (என்று அலோஹ் தாவூத் நபிகளிடம் கூறினான்) (38:26)

"யாருடைய உள்ளத்தை நம்மை நினைவு கூறவிடாமல் திருப்பி விட்டோமோ அவனுக்கு (நபியே) நீர் கட்டுப்படாதீர். அவன் தன் மனம் போன போக்கில் போனதால் அவனது காரியம் வரம்பு மீறியதாகி விட்டது" என்று நபி(ஸல்)க்கு அல்லாஹ் கூறினான்.(18;20)

"அல்லாஹ்விடமிருந்து வந்த நேர்வழியில் செல்லாமல் தன் மனம் போன போக்கில் போகிறவனை விட மிக வழி கெட்டவன் யார் இருக்க முடியும். (28:50)

# தொலைந்து போன வாழ்க்கை...

என் பெயர் நசீருத்தீன்.நான் ஓர் எழுத்தாளன் அல்ல. ஆனால் என்கதையை எல்லோரும் கேட்டாக வேண்டும் என விரும்புகின்றேன். ஏனெனில் என்னைப் போல் பலர் தங்கள் வாழ்க்கையை . சிறையில் தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நாட்டில் புறக்கணிக்கப்பட்ட ஒரு கிராமத்தில் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

எங்கள் கிராமத்தில் படிப்பு என்றால் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

ஆனால் என்னுடைய தந்தை படிப்புக்கு மிகவும் முக்கியத்துவம் தந்தார். என்னையும் என் சகோதரனையும் படிக்க வைக்க வேண்டும் என்பதை தன் வாழ்வில் லட்சியமாக ஆக்கிக் கொண்டார்.

ஆகவே எங்கள் இருவரையும் பக்கத்திலுள்ள, பள்ளிக் கூடத்தில் படிக்க வைத்தார். நான் அந்தப் பள்ளிக்கூடத்தில் 8 ஆம் வகுப்பு வரைப் படித்தேன். என்னை மாநகரிலுள்ள ஒரு நல்ல பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார். அதே போலத்தான் என் சகோதரனையும் அனுப்பினார். என் சகோதரன் 12 ஆம் வகுப்பை முடித்தவுடன் என் சகோதரனை என் தந்தை தன் வியாபாரத்தில் இணைத்துக் கொண்டார்.

இரண்டு பேரும் வியாபாரம் செய்து கிடைத்த வருமானத்தில் என்னை படிக்க வைத்தார்கள். நான் B.A. இளங்கலை பட்டப்படிப்பைப் படித்து முடித்தேன்.

என் தாயார் நான் திருமணம் முடிக்க வேண்டும் என விரும்பினார்கள். நான் மேல் படிப்பு படிக்க வேண்டும் என விரும்பினேன். என் தந்தையும் அதையே விரும்பினார். ஆனால் என் தாயார் அடம் பிடித்தார்கள். எனக்கு திருமணம் முடிக்க வேண்டும் என விரும்பினார்கள்.

இறுதியில் என் தாயாரின் பிடிவாதமே வென்றது. ஓர் அழகான பெண்மணியை, நுஸ்ரத் என்ற பெண்மணியை எனக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். ஒரு வருடத்தில் எனக்கோர் ஆண் மகனும் பிறந்தான். குடும்பத்தில் எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள்.

நான் மேல் படிப்பிற்காக தலைநகர் டெல்லிக்கு வந்தேன். அங்கே முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்து வசித்து வந்தேன்.

இது போது பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டு ஒரு வருடம் முடிந்திருந்தது. இது எனக்குத் தெரியாது.

ஆனால் ஒரு நாள் இரவில் என்னுடைய அறைக்கதவை யாரோ தட்டுவது போல் இருந்தது. நான் கதவைத் திறந்தேன். காவல் துறையினர் துப்பாக்கியோடு நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் துப்பாக்கியை என் நெஞ்சுக்கு நேர் வைத்துக் குறிபார்த்தார்கள். ஒரு சிட்டுக்குருவியைத் தூக்குவதைப் போல் என்னை செந்தூக்காகத் தூக்கிச் சென்றார்கள்.

என்னைக் கைது செய்திருப்பதாகவும், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டு ஓராண்டு முடிந்திருப்பதாகவும், அந்த நாளில் குண்டு

வைக்க முயற்சி செய்ததாகவும் கூறினார்கள்.

நான் இதைத் திரும்பத் திரும்ப மறுத்தேன். இடி வீழ்ந்ததைப் போல் அடிகள் வீழ்ந்தன. நான் செய்யாத ஒன்றை நான் ஒத்துக் கொள்ள என் மனம் இடந்தந்திடவில்லை.

நான் அத்தனைச் சித்திரவதைகளுக்கிடையேயும் மறுப்பதிலேயே கவனமாக இருந்தான்.

ஆனாலும், நானும் மனிதன் தான், என்னால் எல்லா சித்திரவதைகளையும் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

மரணத்தை எளிதாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஏனோ என்னால் சித்திரவதைகளை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஒரு கட்டத்தில் அவர்கள் காட்டிய இடத்தில் கையெழுத்தைப் போட்டு விட்டு வெளியே இந்தச் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவது என முடிவு செய்தேன்.

அவர்கள் கையெழுத்தை வாங்கி விட்டு என்னை விட்டு விடுவார்கள் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் என் கைரேகையை ஒரு பெரிய "Bag" பையில் ஒட்ட வைத்தார்கள்.

பின்னர் அந்தப் பையில் 5 கிலோ ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருள்களை வைத்திருந்ததாகக் குற்றப் பத்திரிகையில் கூறினார்கள்.

அடப்பாவிகளே! எப்படியெல்லாம் அப்பாவிகளைக் குற்றப்படுத்தி வாழ்க்கையைப் பாழாக்கி விடுகின்றார்கள்.

என்னை கைது செய்திருக்கின்றார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் என் தந்தை அதனை எதிர்ப்பது சண்டை இடுவது என முடிவு செய்தார்.

ஆனால், வழக்கறிஞர்கள் கேட்டப் பெரிய தொகையை அவர் எங்கிருந்து கொடுப்பார். பணத்திற்காக கொஞ்சம் இடத்தை விற்றார்.

என் மீது தடாவைப் பாய்ச்சினார்கள். இந்த தடாவில் நாம் கொடுக்கும் வாக்கு மூலம் செல்லும். இந்தத் தடாவின் கீழ் தான் லட்சக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு வாழ்க்கையை இழந்தார்கள் பின்னர் அத்தனை பேரும் அப்பாவிகள் என விடுவிக்கப்பட்டார்கள் என்பதை பின்னர் அறிந்தேன்.

தடா பொடா என்றெல்லாம் சொல்லி 11 பதினொரு ஆண்டுகள் கடந்தன.

பதினொன்றாம் ஆண்டில் என் மீதுள்ள, எல்லாக் குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டு விட்டதாகவும், நான் என் ஆயுள் முடியும் வரை சிறையில் தான் இருக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சுருண்டு வீழ்ந்தார் என் தந்தை இந்தத் தீர்ப்பைக் கேள்விப்பட்டதும்.

ஆனாலும் நீதித்துறையின் அனைத்துப் படிக்கட்டுகளையும் மிதித்து விடுவது, தொடர்ந்து நீதிக்காகப் போராடுவது என முடிவு செய்தார்.

இன்னும் மிச்சம் மீதி இருந்த சொத்துக்களையும் விற்றார். உயர் நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் சென்றார். அங்கும் ஒரு பெரும் தொகையைச் செலவு செய்தார்.

உயர் நீதிமன்றமும் என் ஆயுள் தண்டனையை உறுதி செய்தது.

நான் இனி சுந்ததிரக் காற்றையே சுவாசிக்க இயலாது என்பதை உணர்ந்தேன். நான் அழுது கொண்டே இருந்தேன். என் தந்தையும், என்

குடும்பமும் தான் கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தது.

என் தந்தை உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் செல்வது என முடிவு செய்தார். அதற்காக எஞ்சி இருந்தையெல்லாம் விற்றார் ஒட்டாண்டியானார்.

ஆனாலும் விடிவே கிடைக்காது என்ற நிலை தான்.

நீதிமன்ற செலவுகளுக்காகவும் இதர செலவுகளுக்காகவும், இருந்ததையெல்லாம் விற்றதில் என் தந்தை ஒட்டாண்டியானார்.

பிறரிடம் கையேந்தும் நிலை. ஆனால் அவர் செய்யவில்லை. நடந்ததையெல்லாம் நினைத்து கலங்கினார். அடிக்கடி மாரடைப்பு வந்தது. ஆமாம் ஒரு நாள் அடைத்த மார்பு திறக்கவே இல்லை. அவர் இறைவனிடம் சென்று விட்டார் எங்களை ஏங்க விட்டு.

என்னால் தான் என் தந்தை எல்லாவற்றையும் இழந்தார். இறுதியில், தன் உயிரையும் இழந்தார். என் மொத்தக் குடும்பமும் தத்தளித்தது. நிலை குலைந்தது.

இந்தச் சோகம் என்னை அப்பிக் கொண்டது. என்னோடு சிறை பிடிக்கப்பட்ட அப்ரால் அஹ்மத் மற்றும் ஜெலீல் அன்சாரி ஆகியோரை சென்று பார்த்தேன். அவர்களையும் நீதிமன்றம் விடுதலைச் செய்திருந்தது. ஆனால் அவர்கள் வெளியே செல்ல விரும்பவில்லை. அவர்களின் குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றிருந்தன. அதனால் அவர்கள் போவதற்கான இடங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் சிறையைத் தான் வாழ்விடமாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.

அதனால் அவர்கள் விடுதலையை - சிறையிலிருந்து வெளியே வருவதை அறவே விரும்பவில்லை. நானும் நொந்து போயிருந்ததால் அவர்களிடம் எதையும் பேசிடவில்லை. அவர்கள் கண்ணீரில் நீராடிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் என்னை அழைத்து சிறையின் வாசல்களைத் திறந்து வெளியே போ! என்றார்கள்.

நான் வெளியே வந்தேன்.

என்ன ஆச்சர்யம்?

என் அண்ணன், ஒரு காரோடு வந்திருந்தான். என்னைக் கட்டித் தழுவினான். கண்ணீரால் முகமன் சொல்லிக் கொண்டோம்.

காரில் என்னை ஏற்றினான். சில நேரம் கார் ஓடிய பின் ஒரு பழைய கட்டடத்தின் முன் நின்றது.

அங்கிருந்தவர்களெல்லாம் புதியவர்களாகவே எனக்குப் பட்டது.

என் தாயார் தான் முதலில் ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து அழுதார். பின்னர் மெலிந்தும் நலிந்தும் போன என் மனைவி விறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றார். அவர்தான் என் மனைவி என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. காரணம் 23 ஆண்டுகளுக்கு முன் அவள் அவ்வளவு அழகாக இருந்தார். நான் அவளைப் பிரிந்து டெல்லி செல்லும் போது அவள் அழுது கொண்டே என்னிடம் கேட்டாள். எப்போது நீங்கள் வருவீர்கள் என்று நான் அவளிடம் படிக்கத்தான். போகின்றேன். அடிக்கடி உன்னை வந்து பார்ப்பேன் என்றேன்.

ஆனால் நான் 23 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அவளை வந்து பார்த்தேன். அப்போது இருவரும் வாழ்க்கைத் தொலைத்திருந்தோம். அவள் இப்போது ஒஜ வயதான பாட்டியின் தோற்றத்தில் நின்றாள். என் மகன் ....? எனக் கேட்டேன். அவன் வளர்ந்திருந்தான். ஆனால், வாலிபம் அவனிடமிருந்து விடை பெற்றுச் சென்றிருந்தது. என் செய்வது.

*என்னுடைய இதயம் கனத்தது. இன்னும் அதைச் சுமந்து கொண்டு என்னால் நின்றிட இயலும் எனத் தோன்றிடவில்லை - அப்படியே இதயத்தை பிடித்துக் கொண்டே தரையில் அமர்ந்தேன்.*

*தண்ணீர் தந்தார்கள். சற்றே தெளிவு பெற்றேன்.*

*என் மகன் அப்துல்லாவை படிக்க வைக்க இயலவில்லை. காரணம் அவனுடைய படிப்புக்காக எதையும் செலவு செய்திட இயலவில்லை என்றனர். அதே நேரத்தில் குடும்பத்தின் செலவினங்களைத் சரிகட்ட அவனுடைய உழைப்பும் தேவைப்பட்டது என்றார்கள்.*

*வீடு முழுவதும் யார் யாரோ வந்து குழுமி நின்றார்கள்.*

*எனக்கு யாரையும் தெரியவில்லை. நான் அப்பாவி என உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது.*

*ஆனால் எனக்கு வாழ்ந்திட பிடிக்கவில்லை.*

*நன்றி :* MG *1-15* July *2016*

# காஷ்மீர் படுகொலைகள்



## யார் இந்த புர்ஹான் வாணி

புர்ஹான் முஸஃப்ஃபர் வாணி ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்தின் கமாண்டர் என்று சொல்லப்படுகிறார். தந்தையின் பெயர் முஸஃப்பர் அஹமது வாணி தாயார் மைமூனா

இவர் கடந்த 08.09.2016 அன்று இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது தலைக்கு 10 இலட்சம் ரூபாய் பரிசு இந்திய இராணுவத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## முதன்மை மாணவன்

புர்ஹான் வாணியின் பிறப்பிடம் புல்வாமா மாவட்டத்தில் டிரால் (Tral) என்ற இடம். தந்தையார் கிராமத்தில் பள்ளியின் தலைமையாசிரியர்.

புர்ஹானியின் தாய் அறிவியலில் ஒரு முதுகலை பட்டதாரி, புர்ஹான் வாணி 10 வது படித்து கொண்டிருந்த போது பள்ளிக் கூடத்திலேயே சிறந்த மாணவர் அவர் தான். கிரிக்கெட் அவரது பிடித்த விளையாட்டு விரேந்தி. சேவாக் மற்றும் ஷாஹித் அஃப்ரிடி அவருடைய பிடித்தமான விளையாட்டு வீரர்கள்.

தன் இளமைப் பொழுதை அனைவரையும் போல் அமைதியாகத் தான் கழித்து வந்தார் புர்ஹான் வாணி. அப்போது தான் அவரை நோக்கி அந்த சோதனை வந்தது.

## பேனாவுக்கு பதில் துப்பாக்கி!

15 வது மாணவனான புர்ஹான் வாணி தன் சகோதரன் காலித் உடன் தன்னுடைய புதிய இரு சக்கர வாகனத்தில் ஒரு சுற்று செல்ல கிளம்பினான். உடன் அவனுடைய நண்பனும் இருந்தான். வழியில் இந்திய

இராணுவத்தை சேர்ந்த கூட்டம் ஒன்று அவர்களை வழி மறித்தது. அந்த இளைஞர்களை இராணுவத்தினர் சிகரெட்டுகளை வாங்கி வரச் சொல்லி பணித்தது. இவ்வாறு கண்களில்



மாட்டுபவர்களையெல்லாம் ஏதாவது ஒன்றை ஓசியில் வாங்கி வரச் சொல்வது வழமையான ஒன்று தான்.

காலித் வாணி சென்று சிகரெட்டுகளை வாங்கிக் கொண்டு திரும்பினான். ஓசியில் அதனை வாங்கிக் கொண்ட பின்னரும் இராணுவத்தினர் அவர்களை விடவில்லை. புர்ஹான் வாணியையும் காலித் வாணியையும் அடித்து துவைத்து நையப்புடைத்தனர்.

காலித் தன் சுய நினைவிழந்து கீழே விழுந்தான். அவனுடைய புதிய இரு சக்கர வாகனம் சேதமடைந்தது. புர்ஹான் வாணியும் அவனது நண்பனும் ஒருவழியாக தப்பி ஓடி வந்தனர். ஓடிவரும் போது புர்ஹான் வாணி தன் சகோதரனை இந்த நிலைக்கு ஆளாக்கியதற்காக இந்திய இராணுவத்தை பழி வாங்குவேன் என சபதமிட்டு சென்றான். சரியாக அதற்கு ஆறு மாதங்களுக்கு பிறகு வாணி வீட்டை விட்டு சென்று விட்டான்.

இவ்வாறாக ஒரு முதன்மை மாணவன் கையில் இருந்த பேனா பிடுங்கப்பட்டு துப்பாக்கி திணிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை தி கிரேட்டர் காஷ்மீர் (The Greater Kashmir) இதழுக்கு புர்ஹான் வாணியின் நண்பன் நேர்காணலில் தெரிவித்துள்ளான்.

## முஸஃப்பர் அஹ்மது வாணி

புர்ஹான் வாணியின் தந்தை முஸஃப்பர் அஹ்மது வாணி தன் மகன் ஏன் போராளியானான் என்பது குறித்து (யுத் கி. ஆவாஸ்) (Youth K. Awaaz) - இளைஞர்களின் குரல் என்ற பத்திரிக்கைக்கு பேட்டியளிக்கும் போது பின்வருமாறு தெரிவித்தார்.

“கிட்டதட்ட இங்குள்ள அனைவரும் இந்திய இராணுவத்தால் அடிக்கப்பட்டவர்களே உங்களுக்கும் உங்களுடைய பங்கு கிடைத்திருக்கும் (பேட்டி எடுப்பவர் காஷ்மீரை சேர்ந்தவர். அவருக்கும் இந்திய



இராணுவத்தின் அடி உதை கிடைத்திருக்கும் என்று கூறுகிறார் அஹ்மது வாணி) ஆனால் எல்லாரும் போராளியாக மாறுவதில்லை. இது ஒவ்வொருவரும் எவ்வளவு தாங்கிக் கொள்ள முடியும் என்பதை பொறுத்து அமைகிறது.

(ஏ ஆப் கி கைரத் பே டிவெண்ட் கர்தாஹே)

இது ஒவ்வொருவரின் தன்மானத்தை பொறுத்த விஷயம். ஒருவரின் தன்மானம் மீண்டும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகும் போது அவர் அதற்கு பதில் சொல்ல முடிவெடுக்கிறார். மற்றவர்கள் அமைதியாக இருந்து விட முடிவெடுக்கிறார்கள். என் மகனால் இந்த அடாவடித்தனங்களையும் அவமானங்களையும் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே அவன் இப்போது இருக்கும் பாதையை தேர்ந்தெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டான்.”

புர்ஹான் வானி உறவு முறை சகோதரர்கள் பலர் அதற்கு முன்பே போராட்ட பாதையை தேர்ந்தெடுத்து இருந்தனர். எனவே புர்ஹான் வாணிக்கும் அந்த பாதையை பிடித்துக் கொள்வது சுலபமாகிப் போனது என கிரேட்டர் கஷ்மீர் தனது பதிவில் வெளியிட்டுள்ளது.

## புர்ஹான் வாணி ஏன் பிரபலம் ஆனார்?

இதன் பின்னர் புர்ஹான் வாணி 100 க்கும் மேற்பட்டவர்களை போராட்ட பாதைக்கு கொண்டு சென்றார்.

கேட்ச் நியூஸ் (Catch NeWs) இல் வந்த ஒரு செய்தி இவ்வாறு விவரிக்கிறது.

“புர்ஹான் வாணி இதன் பின்னர் காஷ்மீரில் உள்ள பாதுகாப்பு படையினருக்கு தலைவலியாக மாறிப் போனார். ஆனால் அதே சமயம் அவர் எல்லையற்ற மனித உரிமை மீறல்களின் கீழ்

வாழும் காஷ்மீர் மக்களின் மனதை கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டார். ஏனெனில் அவர் தான் தன் முகத்தையும் அடையாளத்தையும் சமூக வலை தளங்களின் வழியாக தைரியமாக வெளிக்காட்டியவர். இதனால் அவர் கண்மூடித்தனமான அடாவடித் தனங்களின் கீழும் அவமானங்களின் கீழும் வாழ்ந்த காஷ்மீர் மக்களின் கதாநாயகனாகிப் போனார்."

தங்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கக் கூடிய ஓர் அடையாளம் அந்த மக்களுக்கு கிடைத்து விட்டது" என கேட்ச் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது. காஷ்மீரை தவிர்த்து நாட்டின் பிற பகுதிகளில் எதை தீவிரவாதம் என்று கூறுகிறார்களோ அது அவர்களுக்கு ஒரு சுதந்திர போர். அந்தப் போரை முன்னெடுத்து செல்லும் முகம் ஒன்று அவர்களுக்கு கிடைத்துவிட்டது.

யூடியூபில் பதிவேற்றம் செய்யப்பட்ட காணொளியில் அவர் விளையாக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சிரிப்புகளை பகிர்ந்து கொண்டும் இருக்கிறார். கிரிக்கெட் விளையாடுகிறார் பின்னணியில் பாட்டு ஒலிக்கிறது.

"A«nd uÞnk KA¥g¤ nfh Íªjh »ah
[¡nk âš Í¤ f®"

"நாம் அன்பிற்கு உயிர் கொடுத்தோம்;
காயப்பட்ட இதயங்களை வெற்றிக் கொண்டு"

வணிகவியலில் முதுகலை பட்டம் பெற்ற காலித் வாணி (புர்ஹான் வாணியின் சகோதரர் - இவர் தாக்கப்பட்டதை கண்டு தான் புர்ஹான் போராளியானார்) கடந்த ஏப்ரல் 2015 அன்று பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் புர்ஹான் வாணிக்காக தீவிரவாதத்திற்கு ஆட்களை சேர்த்தார் என்பது பாதுகாப்பு படையினரின் குற்றச்சாட்டு. ஆனால் இது உண்மையல்ல என்கிறார் அவரின் தந்தை முஸஃப்ஃபர் வாணி.

"அவர்கள் காலிதை சுடவில்லை. அவர்கள் ரைபிள் துப்பாக்கியின் பின்புறத்தால் காலித் இன் தலையில் தாக்கினார்கள். அவனுடைய இரண்டு புகைப்படங்கள் உள்ளன. ஒன்றில் அவனுடைய முகமெங்கும் தலையிலிருந்து ரத்தம் வழிவதை காணலாம். அவனுடைய வாயில் ஒரு பல்லை கூட விட்டு வைக்காமல் அடித்து உடைத்து விட்டார்கள்" என்று கூறுகிறார் முஸப்பர்.

புர்ஹான் வாணியில் உடல் அவருடைய சகோதரர் காலித் வாணியின் உடலுக்கு அருகில் டிரால்-இல் அடக்கம் செய்யப்பட்டது.

## காஷ்மீர் மக்களின் போராட்டம் ஏன்?

கிட்டதத்தட்ட 33 நாட்கள் ஆகி விட்டன. இன்னும் போராட்டங்கள் ஓய்ந்த பாடில்லை. சாதாரண சாமானிய மக்களை சொந்த நாட்டு மக்களை நிராயுதபாணியான மக்களை ஏதோ போர் களத்தில் எதிரி நாட்டு வீரர்களை ஆயுதங்களுடன் சந்திப்பவர்களை போல சகட்டு மேனிக்கு சுட்டு கொன்று கொண்டாடி வருகிறது இந்திய இராணுவம்.

காஷ்மீரிகள் இந்தியர்கள் என்றால் அவர்களை கொல்லும் உரிமை உங்களுக்கு இல்லை. அவர்களை காப்பாற்றும் கடமை தான் உங்களுக்கு உள்ளது. அவர்கள் இந்தியர்கள் இல்லை என்றால் இந்தியா அல்லாத பகுதியில் தலையிடும் வேலை நமக்கு கிடையாது என் அறிவார்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனால் இதைப் பற்றி எல்லாம் எங்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது என்கிற ரீதியில் ஆளும் பாஜக அரசின் பாதுகாப்பு துறை அமைச்சர் ஏன் இத்தனை மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஏன் அவர்கள் மீது இராணுவம் இத்தனை அடாவடித்தனங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்ற கேள்விக்கு "போர்க்களத்தில் இராணுவம் எடுப்பது தான் முடிவு" என திமிராக



பதிலளித்துள்ளார்.

“ராஜ்நாத் சிங் அவர்களே அவர்கள் எதிரி நாட்டு போர் வீரர்கள் அல்ல. நம் நாட்டு மக்கள். நம் நாட்டுடன் இணைந்திருக்க வேண்டும் என விரும்பியவர்கள். ஆனால் நாம் அவர்களுக்கு தொடர்ச்சியாக செய்து வந்த துரோகம் அவர்களை நமக்கு எதிராக போராட வைத்து விட்டது” என காஷ்மீரை சேர்ந்த குலாம் நபி ஆசாத் போன்றோர் கதறிய கதறல்கள் நாடாளுமன்றத்தில் செவிடர்கள் காதில் ஊதிய சங்கைப் போன்று ஆகிப்போனது.

## அப்சல் குரு

இந்த போராட்டம் புர்ஹான் வாணியின் கொலையில் ஆரம்பித்தது என நாம் நினைப்போமேயானால் அது நம் அறிவீனம்.

இது எற்கனவே காஷ்மீர் மக்களிடம் புகைந்து கொண்டிருந்த புகைச்சலில் வெளிப்பாடு, இதன் உச்ச கட்டம் அஃப்சல் குருவின் தூக்கு தண்டனை. அப்சல் குரு இந்திய இராணுவத்திடம் சரணடைந்தவர். மருத்துவ மாணவரான (கவனியுங்கள் அஃப்சல் குருவும் மிகச் சிறந்த மாணவரே) அஃப்சல் குரு காஷ்மீர். பள்ளத்தாக்கில் நடைபெற்ற அடாவடித்தனங்களால் பாதிக்கப்பட்டு பாகிஸ்தானுக்கு சென்று அங்கு பயிற்சி பெற்று வந்தார். பின்னர் பாகிஸ்தான் அரசு காஷ்மீர் மக்களின் விஷயத்தில் செய்யும் அரசியலைக் கண்டு மனம் நொந்து இந்திய இராணுவத்திடம் சரணடைந்தார். இதற்கான சரணடைந்த தீவிரவாதி என்ற சான்றிதழையும் பெற்றிருந்தார் அஃப்சல் குரு.

இதன் பின்னர் தன் வாழ்வு அமைதியாக மாறி விடும் என நம்பினார் அப்சல் குரு. ஆனால் அதன் பின்னர் இராணுவமும் காஷ்மீர் காவல் துறையும் அடிக்கடி அவரை தொந்தரவு செய்தன. பல முறை அவர்களுக்கு பெரிய பெரிய தொகைகளை தன்னை தொந்தரவு செய்யாமலிருக்க அஃப்சல் குரு தர



அஃப்சல்குரு

வேண்டியதாகிப் போனது.

கையில் இருந்த பணமெல்லாம் காலியாகிப் போன பின் பாதுகாப்பு படையினர் கேட்ட தொகையை அஃப்சல் குருவால் தர இயலாமல் போனது. அதன் பின்னர் அவருக்கு கிடைத்தது அடி உதை தான்.

இறுதியாக அவர் டெல்லிக்கு வியாபாரம் செய்ய சென்று விடலாம் என முடிவு செய்த போது தான் அவருக்கு அந்தப் பணி செய்ய காவல் துறையினர் கட்டளையிட்டனர்.

டெல்லிக்கு சென்று வந்து கொண்டிருந்த அஃப்சல் குருவிடம் காவல் துறையினர் (உளவுத்துறை) குறிப்பிட்ட நபரை டெல்லியில் கொண்டு சென்று விட பணித்தது. அஃப்சல் குருவும் இதனை செய்தார்.

பின்னர் அந்த நபரைக் கொண்டு நாடாளுமன்ற தாக்குதல் நடத்தப்பட்டது. அஃப்சல் குரு இவ்வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டார். அவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

## இரகசிய தூக்கு

இதன் பின்னர் ஜனாதிபதி அவருடைய கருணை மனுவிற்கு முன்னேற்றம் தந்து 17 மனுக்களுக்கு பின்னால் இருந்தவருடைய மனுவை முதலிடத்திற்கு கொண்டு வந்து தூக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

தூக்கு தண்டனை வரலாற்றில் முதன் முறையாக அஃப்சல் குரு இரகசியமாக தூக்கிலிடப்பட்டார். தூக்கிலிடப்பட்ட செய்தி அவருடைய குடும்பத்தாருக்கு கூட தெரிவிக்கப்படாமல் இரகசியம் பேணியது இந்திய அரசு.

இந்தியாவில் தாங்கள் கடைசியாக நம்பிக்கை வைத்திருந்த நீதி அமைப்பும் தங்களை ஏமாற்றி விட்டதாக காஷ்மீர மக்கள் நினைத்தனர்.

அதுவும் அஃப்சல் குருவுக்கு எதிராக எந்த சாட்சியங்களும் இல்லாத நிலையில் நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சிக்காக தூக்கு தண்டனை விதிக்கிறோம் என உச்ச நீதிமன்றம் அறிவித்தது பெரும் விவாதமாகிப் போனது. யாருடைய கூட்டு மனசாட்சியை திருப்தி படுத்த அஃப்சல் குருவிற்கு உச்ச நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது என்ற கேள்வியும் எழுந்தது. இது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானதொரு சொல்லாட்சி என மூத்த வழக்கறிஞர்களும் ஓய்வு பெற்ற நீதியரசர்களும் கருத்து தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னரும் ஜனாதிபதியின் கருணை மனுவின் வாயிலாக அஃப்சல் குரு விடுவிக்கப்பட்டு விடுவார் என நினைத்திருந்த காஷ்மிர மக்களுக்கு அஃப்சல் குரு தூக்கிலிட்ட பின்பு தான் தெரிந்தது நாட்டின் கூட்டு மனசாட்சி என்பது காஷ்மீர் மக்களுக்கு எதிரான மனசாட்சி என்று.

அப்சல் குரு தூக்கிலிடப்பட்டார் இரகசியமாக, அதன் பின்னும் தொடர்ந்தது இந்திய அரசின் துரோகம் காஷ்மீர மக்களுக்கு எதிராக,

தூக்கிலிடப்பட்ட அஃப்சல் குருவின் உடல் அவருடைய உறவினர்களிடம்




அவரது மனைவி மக்களிடம் ஒப்படைக்கப்படாமல் இரகசியமாக சிறைச்சாலையிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

ஒரு நேர்காணலில் அஃப்சல் குரு 2006 ல் இவ்வாறு கூறினார், "என்னை தூக்கிலிட விரும்பினால் தூக்கிலிட்டுக் கொள்ளங்கள். ஆனால் அது இந்தியாவில் அரசியல் மற்றும் நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் களங்கம் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்."

இவ்வாறு காஷ்மீர் மக்களின் நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக உடைக்கப்பட்டு அவர்கள் இந்திய அரசியல், நீதித்துறை எதன் மீதும் நம்பிக்கையற்று நின்றனர். காஷ்மீர் மக்களுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. காஷ்மீரிகள் அப்பாவிகளாக இருந்தாலும் அடித்து உதைக்கப்பட்டு கொல்லப்படுவர். அல்லது எதிர்த்து நின்று விட்டு மீண்டும் மனம் திருந்தி ஆயுதங்களை கீழே போட்டு விட்டு வந்தாலும் கொல்லப்படுவர். கொல்லப்படுவது அல்லது காயப்படுத்தப்படுவது என்பது உறுதி. நாட்களும் தேதிகளும் வேண்டுமானால் மாறலாம்.

இதனை காஷ்மீரிகள் தெளிவாக உணர்ந்து கொண்டனர். எனவே காஷ்மீர மக்களின் இந்திய அரசுக்கு எதிரான உணர்வு அஃப்சல் குரு விஷயத்திலேயே வீறு கொண்டு விட்டது. தற்போது புர்ஹான் வாணி விஷயத்தில் அது பற்றிக் கொண்டு எறிகிறது. போகும் உயிர் என்றாவது ஒரு நாள் பாதுகாப்பு படையினரின் கைகளால் போகப் போகிறது. அது இன்றே நடந்து விட்டு போகட்டும் என முடிவு செய்து விட்டதாக தெரிகிறது.

## காஷ்மீரில் நடப்பது இனப்படுகொலை

ஒரு முறைப்படுத்தப்பட்ட இனப்படுகொலை (Systematic Genocide) காஷ்மீரில் நடத்தப்பட்டு வருகிறது. காஷ்மீர் ரீடர் என்ற இதழ் காஷ்மீரில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களையும்



படுகொலைகளையும் இவ்வாறு தான் வர்ணிக்கிறது. இந்தியாவில் இஸ்ரேலில் நடப்பது போன்ற "முறைப்படுத்தப்பட்ட இனப்படுகொலையையும்", 'எல்லா காஷ்மீரிகளையும் ஊனப்படுத்துதல்" என்பதையும் செயல் முறையில் ஏற்றுக் கொண்டுள்ளதை காஷ்மீர் ரீடர் இதழ் படம் பிடித்து காட்டுகிறது.

காஷ்மீரின் மொத்த மக்கள் தொகை 7198114 *(2011ன் கணக்கெடுப்பின் படி) ஜம்மு-காஷ்மீர் மொத்தம் சேர்த்து 1,25,48925. அதாவது காஷ்மீரில் 72 இலட்சம் ஜம்முவில் 53.5 இலட்சம்.

கடந்த 21 ஆண்டுகளில் காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். 60,000 க்கும் மேற்பட்டோர் காணாமல் போய் உள்ளனர். (இவர்கள் இராணுவத்தால் அழைத்து செல்லப்பட்டவர்கள். அவர்களின் நிலை என்ன வென்று வெளியிடப்படவில்லை. ஆனால் அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர். படிக்க வேர்கள் பதிப்பகத்தின் காஷ்தீரின் பாதி விதவைகள்) இது கிட்டத்தட்ட 2.2% அதாவது காஷ்மீர் மக்கள் தொகையில் 2.2 சதவிதும் பேர் கொல்லப்பட்டுவிட்டனர்.

கிட்டத்தட்ட 2 இலட்சம் பேருக்கு மேலாக ஏதாவது ஒரு வகையில் ஊனப்படுத்தப்பட்டுள்ளனர். இது கிட்டத்தட்ட 2.8 சதவீதம்., ஆக காஷ்மீரின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 5 சதவீதம் பேர் கொல்லப்பட்டு, ஊனமாக்கப்பட்டு விட்டனர். இனி மீதம் உள்ளவர்களை முறையாக கொல்லவும் ஊனப்படுத்தவும் இந்திய அரசு முயன்று வருகிறது.

## டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் வெறி

மேலே சொல்லியுள்ள கணக்கை டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை மறுக்கிறது. தன் இயல்பான இந்துத்துவா சிந்தனையுடன் அந்தப் பத்திரிகை பின்வருமாறு செய்தி வெளியிட்டுள்ளது.

"அடிக்கடி சில எண்ணிக்கைகள்



காஷ்மீர் பொது மக்கள் விஷயத்தில வெளியிடப்பட்டு அது வெகுவாக நம்பப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 10000 பேர் காணாமல் போய் உள்ளனர் கடந்த 20 வருடங்களாக ......

டைம்ஸ் ஆஃப் இந்தியா ஜம்மு காஷ்மீர் அரசு ஆவணங்களை இந்த உண்மைகளை கண்டறிய கைக்கொண்டுள்ளது. ஜனவரி 1990 முதல் ஏப்ரல் 2011 வரையில் உள்ள ஆவணங்கள், அவை ஒவ்வொரு வருடமும் நடந்த நிகழ்வுகள் அதில் ஏற்பட்ட உயிர் சேதங்களை சரியாக நமக்கு தருகின்றன.

அந்த புள்ளி விவரங்கள் சொல்வதென்ன?

## கொல்லப்பட்டது 1,00,000 பேர்அல்ல

கடந்த 21 வருடங்களில் 43,460 பேர் மட்டுமே காஷ்மீரில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 21,323 பேர் போராளிகள் 13,221 பொது மக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். 3642 அப்பாவி பொதுமக்கள் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர், 5369 பேர் பாதுகாப்பு படையினர் 21,323 போராளிகளில் உள்நாட்டு போராளிகளும் வெளிநாட்டு போராளிகளும் அடங்குவர். 5369 பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொல்லப்பட்டதில் 1500 பேர் காஷ்மீர் காவலர்கள்.

13,226 அப்பாவி பொது மக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதை குறித்து ஏன் யாரும் பேசுவதில்லை என கேள்வி எழுப்புகிறார் அர்னாப்.

முதலில் அவர் தாங்கள் அரசு ஆவணங்களில் கஷ்டப்பட்டு எடுத்ததாக பீற்றிக் கொள்ளும் இந்த தகவல்கள் இளைய உள் துறை அமைச்சர் (Junior home minister) ஜிதேந்திர பிரசாத் அவர்களால் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட தகவல்கள்.

## டைம்ஸ் ஆஃப் இந்தியாவுக்கு பின்வரும் கேள்விகள்:





ஒரு வேளை டைம்ஸ் ஆஃப் இந்தியா சொல்வது உண்மையென்றால் 500 முதல் 700 வரை எண்ணிக்கையிலான தீவிரவாதிகளை முடக்க 7 இலட்சம் இராணுவம் மற்றும் CRPF படையினரை காஷ்மிரில் குவித்து வைத்துள்ள போதும் 13226 பேரை தீவிரவாதிகள் கொல்ல விட்டு வைத்திருப்பதன் மூலம் 7 இலட்சம் பாதுகாப்பு படையினரும் கையாளாகாதவர்கள் என்ற கேள்வி எழாதா?

இப்படி 13226 பேர்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்ற பின்னரும் புர்ஹான் வாணி போன்றோருக்காக காஷ்மிர் பொதுமக்கள் கூடுவதேன்? போராட்டத்தில் ஈடுபடுவதேன்? இது முரணாக தெரிவில்லையா?

21323 பேர் தீவிரவாதிகள் என்கிறீர்கள். இஸ்ரத் ஜஹான் விஷயத்திலேயே அப்பாவிகளை தீவிரவாதிகள் எனக் கூறி கணக்கெழுதும் தங்களை போன்றோருக்கு முழுக்க முழுக்க இராணுவத்தில் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீரில் உள்ளவர்களை சுட்டுக் கொன்று விட்டு தீவிரவாதிகள் என கணக்கெழுத தெரியாதா என்ன?

அரசு தரும் பல தகவல்களை அலசி ஆராய்ந்து மறுக்கும் பத்திரிகைகள் இதில் மட்டும் அரசு தரும் செய்தியை அப்படியே நம்புவதன் பின்னணி என்ன? குறிப்பாக நீங்கள் நம்புவதன் பின்னணி என்ன?

டைம்ஸ் ஆஃப் இந்தியா இந்த தகவல்களை தந்து விட்டு அதே கட்டுரையில் பின்னால் முரண்படுகிறது.

“இந்த தகவல்கள் அரசு தந்தவை .....

நீங்கள் சொன்னதன் அடிப்படையில் அப்பாவி பொதுமக்கள் 3642 பேர் மட்டும் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்று வைத்துக் கொண்டாலும். இந்த அப்பாவி பொது மக்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டுள்ளதற்கு பாதுகாப்பு படையினர் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது? இதற்கான உரிமையை இந்திய இராணுவத்திற்கு அளித்தது யார்?

13226 பொதுமக்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளதாக அரசு ஆவணம் சொல்கிறது (இராணுவம் கொலை செய்துவிட்டு தீவிரவாதிகள் கொலை செய்ததாக கூறும் இந்த தகவலை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என டைம்ஸ் ஆஃப் இந்தியா விரும்புகிறது.

ஆனால் ஒரு சில மனித உரிமை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் தான் 3642 அப்பாவி பொதுமக்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டனர் என்ற தகவலே வெளி வந்தது என்பதை மறந்து விடக் கூடாது? இல்லையென்றால் இந்த கணக்கும் தீவிரவாதிகளின் கணக்கில் எழுதப்பட்டிருக்கும்.



“எனவே கொலை செய்யப்பட்ட தீவிரவாதிகளில் எத்தனை பேர் உண்மையிலேயே தீவிரவாதிகள். தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாக கூறப்படும் பொதுமக்களில் எத்தனை பேர் உண்மையிலேயே தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர் அல்லது இவர்கள் காஷ்மீரில் உள்ள பிரிவினைவாதிகள் கூறுவது போல் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனரா? துரதிருஷ்டவசமாக யாரிடமும் இதற்கான சரியான பட்டியல் இல்லை” என டைம்ஸ் ஆஃப் இந்தியா அதே கட்டுரையில் கூறுகிறது.

21,323 போராளிகள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டதாக சொல்லப்பட்டதில் சிட்டிசிங் போரா (Chittisingpora) என்னுமிடத்தில் நடந்த படுகொலைக்கு பின்னர் இராணுவத்தால் அழைத்து செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி 6 காஷ்மீர் இளைஞர்களும் அடங்குவார்களா என்பது குறித்து தெரியவில்லை...”

“சிட்டி சிங்பூராவில் 36 சீக்கியர்கள் வெளிநாட்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாக இராணுவத்தால் கூறப்பட்டது. இராணுவம் 6 அப்பாவி காஷ்மீர் இளைஞர்களை அனந்தநாக் (Anantnag) என்னுமிடத்தில் இருந்து இழுத்து சென்று குரூரமாக சுட்டுக் கொன்றது. மற்றொரு தகவல் மூன்று காஷ்மீரி இளைஞர்களை இராணுவம் ஒருவருக்கு ரூ.50000/- வீதம் கொடுத்து விலைக்கு வாங்கி ஏப்ரல் 2009ல் மச்சில் (Machil) என்னுமிடத்தில் கொலை செய்தது. இதனை சி.பி.ஐ பின்னர் கண்டுபிடித்து கூறியது.”

மேற்கண்ட தகவல்களையும் அதே டைம்ஸ் ஆஃப் இந்தியா பதிவு செய்து விட்டு சுட்டு கொல்லப்பட்டதில் 21323 பேர் தீவிரவாதிகள் என கதை விடுகிறது.

http:timesofinda.indiatimes.com/india/state-data-refueses-claim-of-i-lakh-killed-inkashmir/articleshow./8918214.cms.

ஆனால் இதற்கான உண்மையான சான்று என்ன தெரியுமா? அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்கள் கூறுவது. இந்திய இராணுவத்தினருக்கு எதிரான அவர்களின் போராட்டம்.

சில புள்ளி விவரங்களை இது சம்பந்தமான ஆய்வில் ஈடுபட்ட குர்ரம் பர்வேஸ் (Khurram Parvaiz) என்பவர் கூறுகிறார். இவர் சர்வதேச மனித உரிமை மற்றும் நீதிக்கான மக்கள் தீர்ப்பாயம் அமைப்பின் (Internatioanl People’s Tribunal on Human Rights and Justice) காஷ்மீரின் அமைப்பாளர்.

## உலகின் மோசமான சித்ரவதைகள்

“காஷ்மீரை பொறுத்தவரை உலகில் இங்கு நடக்கும் சித்திரவதைகளைப் பற்றிதான் அதிகம் பேசப்படாமல் உள்ளது.

நீங்கள் இங்குள்ள கிராமங்களுக்கு செல்வீர்களானால் ஒவ்வொரு கிராமத்திலும் சித்ரவதை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இருக்கிறார்கள். ஆண்களை மட்டும் இராணும் வதை செய்யவில்லை. பெண்கள், குழந்தைகள், வயதான முதியவர்கள் அனைவரையும் சித்ரவதைக்கு ஆளாக்கியுள்ளனர்.''

**1500 பேர் தங்கள் பிறப்பு உறுப்புக்களில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதனால் ஆண்மையற்று போய் இருப்பதை பர்வேஸ் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்.**

இராணுவத்தினரால் வன்புணர்ச்சி செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை அவர் விவரிக்கிறார். இப்படிப்பட்ட ஒரு வழக்கில் இராணுவத்தின் இத்தகைய வரம்பு மீறிய செயல் ஒளிப்பதிவு செய்யப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது எனினும் அதன் பின்னரும் இதுவரை எந்த நடவடிக்கையும் அவர்கள் மீது இல்லை.

## மிக மோசமான சித்ரவதை

பர்வேஸ் தான் ஆவணப்படுத்தியதிலேயே மிக மோசமான சித்திரவதை ஒன்றைப் பற்றி கூறுகிறார், "நான் மிக கொடூரமான சித்திரவதை வழக்குகவை ஆவணப்படுத்தியுள்ளேன். ஆனால் இது சித்திரவதையின் உச்சம். 60 வயது முதியவர் ஒருவரை இராணுவம் தனிமைச் சிறையில் அடைத்து வைத்தது. இந்த கால கட்டத்தில் அந்த முதியவருக்கு சாப்பிட எதுவும் கொடுக்கப்படவில்லை. ஒன்றைத்தவிர.

அவருடைய உடலின் சதை மட்டுமே அவருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. அவர்கள் அவர் உடலில் இருந்து சதையை அறுத்து எடுத்து அவருக்கு உணவாக வழங்கினார்கள். அதை சாப்பிடவில்லையெனில் அவர் தாக்கப்பட்டார். இதுமட்டுமே ஒருமாத காலமாக அவருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி என்னை உலுக்கிவிட்டது. நூற்றுக்கணக்கான குவாண்டனாமோ சிறைகள் இங்குள்ளன. ஏன் அதைப்பற்றி யாரும் பேசுவதில்லை?''

இவ்வாறு இரகசியமாக நடைபெற்ற சித்திரவதைகளை படுகொலைகளை நீண்ட காலம் மறைத்து வைக்க இயலவில்லை. ஜம்மு-காஷ்மீர் மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) ஓர்






இவ்வாறு காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உண்மையை கண்டறிய போராடுகின்றன.

பல்கீஸ் மன்சூர் என்பவர் காணாமல் போனவர்களின் பெற்றோர்களின் சங்கத்தில் உறுப்பினர். 2000இல் அவருடைய தந்தை நள்ளிரவில் அவருடைய வீட்டில் இருந்து இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டார். இன்று வரை அவருக்கு என்னவானது என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. பல்கீஸ் இந்தியாவின் உச்சநீதிமன்றத்தில வழக்கு தொடுத்துள்ளார். அவருக்கு மிரட்டல்கள் வருகின்றன.

அறிக்கையை வெளியிட்டது. அதில் 38 புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருந்த 2156 அடையாளம் தெரியாத உடல்களை ஆவணப்படுத்தியிருந்தது.

ஆனால் இந்த தகவல்களை டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் அர்னாப் கோஸ்வாமி போல, இந்திய அரசாங்கம் சில பல பொய்களை சொல்லி மூடிமறைக்கப் பார்த்தது. இவை அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து வந்து நம் இராணுவத்துடன் மோதி இறந்த வெளிநாட்டு தீவிரவாதிகளின் உடல்கள். இது குறித்து மக்கள் கவலைக்கொள்ள தேவையில்லை என்ற இந்திய அரசு கதை கூறியது. ஆனால் இந்த உடல்களில் மீது நடத்தப்பட்ட D.N.A. ஆய்வுகள் வேறு உண்மையை கூறின. 53 உடல்களின் மீது நடத்தப்பட்ட D.N.A ஆய்வுகளில் 49 பேரின் உடல்கள். காஷ்முர் பொதுமக்களின் உடல்கள் என்றும் 1 காஷ்மீர் போராளியின் உடல், மற்ற 3 பேர் அடையாளம் தெரியவில்லை.

"குறைந்தபட்சம் கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை பெறும் உரிமையையாவது அந்த மக்களுக்கு தாருங்கள்" என்று மனம் வெறுத்து கூறுகிறார் பர்வேஸ்.

“நான் இதற்கெல்லாம் பயப்படபோவதில்லை. நான் உறுதியாக இருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்” நான் இதை செய்தாக வேண்டும். நான் இதை நிறுத்தப்போவதில்லை” என பல்கீஸ் கூறுகிறார்.

“கடந்த 20 வருடங்களாக இந்த மக்கள் மீது நிகழ்த்தப்படுவது போர் குற்றமே. ஏன் சர்வதேச சமூகம் இந்த விஷயத்தில் அமைதியாக உள்ளது” என கேட்கிறார் பர்வேஸ்.

http:project cnesored.org/kashmir-the-untold-story-of-indian-occupation/.

நாம் குறிப்பிட்டுள்ள உண்மைகளும் தோண்டி எடுக்கப்பட்ட 38 புதைகளும் அதில் கண்டெடுக்கப்பட்ட உடல்களும் - ஜம்மு காஷ்மீரின் மனித உரிமை ஆணையத்தால் ஆவணப் படுத்தப்பட்டவையே. இது குறித்து எந்த பத்திரிகையும் வாய் திறக்கவில்லை. டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழ் இது குறித்து எதுவும் பேசவில்லை. அவர்களின் கண்களுக்கு இதுவெல்லாம், அரசு ஆவணங்களாக தெரியவில்லை. மொத்தத்தில்

இவையெல்லாம் செவிடர்கள் காதில் ஊதிய சங்கிற்கு சமம்.

# காஷ்மீர் சித்ரவதைகள்



தன் சொந்த நாட்டு மக்களின் மீது வேறு எந்த அரசும் இதைப் போன்று வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளதை வரலாற்றில் காண இயலாது. இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது இழைத்து வந்த கொடுமைகளே இதுவரை பேசப்பட்டு வந்த நிலையில் இப்போது அவற்றையெல்லாம் பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னிடம் பிடித்துள்ளது. காஷ்மீர் மக்களின் மீது நிகழ்த்தப் பட்டுள்ள கொடுமைகள்.

33 நாட்கள் ஆகி விட்டன. 60 மேற்பட்டோர் கொல்லப்பட்டு விட்டனர். 6000க்கும் மேற்பட்டோர் நிரந்தர ஊனமாகி விட்டனர். அதில் 600க்கும் மேற்பட்டோர் கண்கள் குருடாகிப் போனது. குறிப்பாக பெல்லட் குண்டுகளால் (Pellet) காயம்பட்டோர் அதிகம். இந்த வகை குண்டுகளை பயன்படுத்த தடை உள்ள போதும் 6000க்கும் மேற்பட்ட முறை இந்த குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன கடந்த 33 நாட்களில்.

இவையெல்லாம் காஷ்மீர் மக்களை கொல்ல வேண்டும் அல்லது நிரந்த ஊனமாக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நிகழ்த்தப் பட்டுள்ளன என்பது நிதர்சனம். கொல் அல்லது காயப் படுத்து என்ற தாரகமந்திரத்துடன் களம் இறங்கியுள்ள காஷ்மீர் பாதுகாப்பு படையினர் அந்த வேலையை செவ்வனே செய்து வருகின்றனர். தப்பித் தவறிக் கூட யாரையும் பாதுகாத்துவிடக்கூடாது அல்லது யாரும் பாதுகாத்து விடப்படக்கூடாது என்ற எண்ணத்துடன் இராணுவம் களம் இறங்கியுள்ளது.

அளவற்ற அதிகாரத்தை அளிக்கும் அஃப்ஸா (AFSPA) சட்டம் அட்டூழியம் செய்யும் இராணுவத்தினரை பாதுகாக்கிறது. இதற்கு மேலாக இராணுவத்தினருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு திருவாளர் இராஜ்நாத்சிங், உள்துறை அமைச்சர் அவர்களை இதனைப் போர் என்கிறார்.

காயம்பட்டுள்ளோரில் இறந்தோரில் பெண்களும், வயதானவர்களும்,



குழந்தைகளுமே அதிகம். குறிப்பாக குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கண்களில் குண்டு பாய்ந்து நிரந்தர ஊனமாகி உள்ளனர்.

திருவாளர் இராஜ்நாத்சிங் அவர்களே இவர்களுக்கு எதிராகவா உங்களின் போர். குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் எதிராகவா உங்கள் இராணுவம். சபாஷ். திறமையான இராணுவம் தான். சீன ஊடுறுவலை தட்டிக் கேட்க முடியாத திறமையான இராணுவம் அல்லவா இந்திய இராணுவம்.

போரில் இராணுவம் எடுப்பதே முடிவு என்ற உங்களின் பதிலுக்கு எங்கள் கேள்வி உங்கள் போர் யாருடன் சீனாவுடனா அல்லது பாகிஸ்தானுடனா? சொந்த மக்களுடனா?

ஒரு இலட்சம் பேரை கொன்று 60,000 பேரை காணமலாக்கி, இலட்சத்திற்கும் மேலானோரை நிரந்தர ஊனமாக்கி யார் மனதை கொள்ளையடித்து யாரை தக்க வைத்து கொள்ளப் போகிறீர்கள்?

இந்திய இராணுவம் மேற்கொள்ளும் அல்லது உங்களுடைய அரசு மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் இத்கைய அடாவடித்தனங்கள் அட்டூழியங்கள் மூலம் காஷ்மீர் மக்களின் உள்ளங்களை கொள்ளையடிக்க முடியுமா?

உங்களுக்கு தேவை 70 இலட்சம் காஷ்மீர் மக்களா அல்லது இந்திய நிலப்பரப்பில் 0.13% சதவீத நிலப்பரப்பு கூட இல்லாத (222, 236$Km^2$) காஷ்மீர் நிலமா?

கொலை செய்து ஊனப்படுத்தி ஒருவருடைய உள்ளத்தை கவர முடியாது என்பதை புரிந்து கொள்ள முடியாத முட்டாள்களா நாம் என்பதே நம்முன் தொங்கி நிற்கும் கேள்வி.

## பெல்லட் குண்டுகள்

தடை செய்யப்பட்ட இந்த குண்டுகள் காஷ்மீரில் சகட்டு மேனிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள், வீட்டில் இருக்கும் பெண்கள், முதியவர்கள் என பாரபட்சம் பாராமல் இந்த குண்டுகளுக்கு குறியாகி உள்ளனர்.

இந்த குண்டு வெடித்தவுடன் இதிலிருந்து வெளிப் படும் குண்டு சற்று தூரம் சென்று 600 குண்டுகளாக சிதறி எதிரிகளின் மேல் பாயும். இதனை பயன்படுத்தும் போது 500 மீட்டர் தொலைவில் இருந்து முழங்காலுக்கு கீழே சுட வேண்டும். இல்லையெனில் இது உயிரைக் கூட பறித்து விடும். காஷ்மீரில் இந்த குண்டுகள் வெகு அருகாமையில் வைத்து சுடப்பட்டுள்ளன. அதுவும் காயங்கள் அனைத்தும் முகங்களிலும், முதுகுகளிலும் ஏற்பட்டுள்ளன.

இது குறித்து முன்னாள் இராணுவ மேஜர் ஒருவரிடம் NDTV இவ்வாறு கேள்வி எழுப்பியது. ஏன் உங்கள் இராணுவத்தினர் பொதுமக்களின் மீது முழங்காலுக்கு மேலே சுட்டனர்? ஏன் முகங்களில் காயம் ஏற்படுத்தினர்? இரண்டே நாளில் 100 பேர் குருடாகும் அளவிற்கு ஏன் இந்த கொடூர

தாக்குதல்?

இதற்கு அந்த மேஜர் எங்கள் இராணுவத்தினர் முழங்காலுக்கு கீழே தான் சுட்டனர். ஆனால் பொதுமக்கள் இராணுவனத்தினரை தாக்க கற்களை எடுக்க கீழே குனிந்ததினால் முகத்தில் காயம் பட்டது என பதிலளித்தார்.

அதற்கு பர்கா தத் என்ற ஊடக நெறியாளர் “1000 பேருக்கு மேல் முகத்தில் காயம் பட்டுள்ளது. ஆயிரம் பேரும் நீங்கள் முழங்காலில் சுடும் போது வேண்டு மென்றே முகத்தை காட்டினரா? 500 மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்து சுடவேண்டியவர்கள் 50 மீட்டருககு குறைவான இடைவெளியில் இருந்து சுடப்பட்டது ஏன்?” என பதில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் ஒன்றும் தர இயலவில்லை மேஜரால்.

இந்த பெல்லட் குண்டுகளால் ஏற்படும் பாதிப்பு இன்னொன்று. இவை உங்கள் உடலில் நிரந்தர வடுக்களை ஏற்படுத்தி விடும். இதன் காரணமாக நீங்கள் குணமடைந்த பின்னமும் உங்களை கலவரத்தில் ஈடுபட்டவர் என அடையாளப்படுத்தி பின்னர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் அல்லவா?

## 5 வயது சிறுவனின் கண்களில் ஊசி ஏற்றி குருடாக்கிய CRPF

அழகான சிறுவன் நசீர் தற்போது சிரீ மஹாராஜா ஹரிசிங் மருத்துவமனையின் (SMHS Hospital) 26ம் எண் படுக்கையில் கிடத்தப்பட்டுள்ளான்.

“அவன் படுக்கையில் இருந்து விழிக்கும் போ தெல்லாம் பீதி வயப்பட்டு கத்துகிறான். ஆர்மி ஹா ஆயி, ஆர் மி ஹா ஆயி யிம் ஹா லாயன் மியா (இராணுவம் வந்து விட்டது, இராணுவம் வந்து விட்டது. என்னை அடிக்க இராணுவம் வந்து விட்டது) என்று கத்துகிறான்” எனக் கூறி கதறி அழுகிறார். நசீரின் தந்தை முஹம்மது அல்தாஃப். இவர்கள் கோகெர்நாக் (Kokernag) என்னுமிடத்தில் வசிப்பவர்கள்.



நசீர் அஹமது

நசீர் அஹமதுவிற்கு 5 வயது. அவன் தன் தந்தையுடன் அனந்தநாக் (Anantnag) என்னுமிடத்திற்கு சென்று குழந்தையின் கண்களில் ஏற்பட்டிருந்த தொற்றுக்கும் தன்னுடைய பாட்டிக்கும் மருந்து வாங்கி விட்டு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு திரும்பி வந்து கொண்டிருந்த போது ஷெர்போரா என்னுமிடத்தை அடைந்தனர். அங்கே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அல்தாஃப் தன் தாயாரை பாதுகாக்க நினைத்தார். தன் தாயார் மகன் இருவரையும் ஒரே நேரத்தில் அந்த சந்தர்ப்பத்தில் கூட்டி செல்வது கடினம் என்று நினைத்தார்.

அவர் தன் மகன் நசீரை அருகில் உள்ள ஒரு சந்தை(தெருவை) காட்டி அங்கேயே அமர்ந்து கொள்ளும்படி பணித்தார். தான் திரும்பி வரும்வரை அங்கேயே உட்கார்ந்து கொண்டு இரு என்று கூறிவிட்டு சென்றார்.






தன் தாயாரை பாதுகாப்பாக கொண்டு சென்று விட்டு விட்டு மீண்டும் நசீரிடம் திரும்பினார்.

"அந்தச் சூழலில் நான் என் தாயாருடன் சென்று கொண்டிருந்த போது நசீரும் வந்தால் அவன் காயப்பட்டு விடக்கூடும் என பயந்தேன்" என்கிறார் அல்தாஃப்.

திரும்பி வந்து பார்த்த போது அவரால் நினைத்து பார்க்கக்கூட முடியாத கொடுமை அவர் மகனுக்கு நிகழ்ந்து விட்டிருந்தது. நசீர் தரையில் வீழ்ந்து கிடந்தான். தன் கண்களை தேய்த்தபடி அழுது கொண்டிருந்தான். நசீரால் அவனது வலியை தாங்க முடியாமல் மண்ணை கடித்து துப்பிக் கொண்டிருந்தான். அவனது கண்கள் எரிந்து கொண்டிருக்கும் தணலைப் போல சிகப்பாக இருந்தன. கண்ணை சுற்றி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அல்தாஃப் உடனடியாக நசீரை அருகில் இருந்த இஸ்லாமாபாத் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்த மருத்துவர்கள் ஆலோசனையின் படி பின்னர் SMHS மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டான். இங்கே வந்த பின்தான் அவன் மருத்துவர்களிடம் உண்மையைக் கூறினான்.

CRPF-ஐ சேர்ந்த ஒருவன் முதலில் நசீரின் கண்ணில் மண்ணை கொட்டியுள்ளான். பின்னர் ஊசியை அந்த குழந்தையின் கண்ணில் குத்தியுள்ளான். அதன் பின்னர் அறைந் துள்ளான். நசீரின் முகமெங்கும் அறை விழுந்த அடையாளங்கள் காணப்பட்டன.

அல்தாஃப், நசீரின் தந்தைக்கு 28 வயதாகிறது. அவருக்கு மூன்று குழந்தைகள். நசீரின் கவலையெல்லாம் இந்த விஷயங்களைப் பற்றி எதுவும் தெரியாத தன் மனைவியிடம் எப்படி இதை சொல்லப் போகிறோம் என்பது தான். தன் கிராமத்தை விட்டு கிளம்பும் போது நன்றாக இருந்த சிறுவன் தற்போது கண்ணை இழந்து விட்டான். மருத்துவர்கள் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்து விட்டனர். ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை.

நசீரின் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் 34 வயது ஷமீமா இருக்கிறார்.


ஸொஹ்ரா மஜீத்

அவர் தன் சகோதரன் உடலில் ஏற்பட்டுள்ள பெல்லட் (Pellet) குண்டு காயத்திற்கு மருத்துவம் பார்க்க வந்துள்ளார். அவரால் நசீருக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு தனக்கும் நசீரைப் போன்றே ஒரு குழந்தை உள்ளதாகவும் 5 வயது குழந்தைகள் கூட அரசுப்படைகளால் தாக்கப்படுவது நம்பவே முடியாத தாக உள்ளது எனவும் கூறுகிறார்.

“இது ஓர் இனப்படுகொலை, எங்கள் இனத்தையே அழிப்பதற்கான முயற்சி. அவர்கள் எங்கள் குழந்தைகளை இலக்காக கொண்டுள்ளார்கள்” எனக் கூறுகிறார்.

அருகில் உள்ள இன்னொருவர், “இவர்கள் தெளிவாக இஸ்ரேலின் கொள்கைகளை கைக் கொண்டுள்ளார்கள். இதைத்தான் இஸ்ரேல் காசாவில் செய்கிறது. குழந்தைகளை கொல்வதன் மூலம் அந்த இனத்தையே கருவறுக்க நினைக்கிறது” என கொந்தளிக்கிறார்.

“உங்கள் கண்களின் கருவிழி காயப்படுத்தப் படும்போது நீங்கள் எப்படி தாங்கிக் கொள்ள இயலும். எனினும் இந்த மருத்துவமனையில் பலர் எனக்கு தைரியம் சொல்கின்றனர். இந்த வயது குழந்தைகளை இந்த உலகில் இவர்களைத் தவிர யார் தான் காயப்படுத்துவார் சொல்லுங்கள்” என கதறி அழுதுக் கொண்டே கேள்வி எழுப்புகிறார் அல்தாஃப்.

http://kashmirreader.com/2016/07/23 crpf-trooper-inserts-needle-eye-5-yr-dd-says-family

## 5 வயது ஸொஹ்ரா மஜீத்

5 வயது குழந்தை ஸொஹ்ரா மஜித் தன்கால் களிலும் வயிற்றிலும் பெல்லட் குண்டுகளை ஏந்திக் கொண்டு தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறாள்.

ஜீலை 1ம் தேதி ஞாயிற்றுகிழமை இரவு CRPF அவள் மீதும் அவள் குடும்பத்தார் மீதும் இந்த குண்டு மழையை பொழிந்து விட்டு சென்று விட்டனர் என அவள் குடும்பத்தார் கூறுகின்றனர்.

“இரவு 11.30 மணியளவில் காமர்வாரி என்ற இடத்தில் (Qamarwari) உள்ள எங்கள் வீட்டிற்கருகே இந்த சம்பவம் நடந்தது” என்று ஜொஹ்ராவின் இளைய சகோதரி சோபியா வாணி ஜொஹ்ராவின் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் படுத்துக்கொண்டு கூறுகிறாள். சோபியாவுக்கும் இடது காலில் பெல்லட் குண்டுகள் பாய்ந்துள்ளன.

நாங்கள் எங்கள் சகோதரியை அவளுக்கு ஏற்பட்ட அலர்ஜிக்காக மருத்துவமனைக்கு ஒரு காரில் அழைத்து சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்கிருந்தோ வந்த காவலர்கள் எங்கள் மீது சுட்டனர்”.

“நாங்கள் கதறி அழுதுக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சில அண்டை வீட்டுக்காரர்கள் அந்த வழியாக சென்று கொண்டிருந்த ஓர் ஆம்புலன்ஸை நிறுத்தி எங்களை ஏற்றி வந்து SMHS



போகிறது" என கதறுகிறான் அராஃபத்.

அராஃபத்தின் இருதயத்திற்குள்ளும், வயிற்றிற்குள்ளும் குடலுக்குள்ளும், அவனுடைய முதுகு தண்டுவடத்தை சில குண்டுகள் துளைத்திருப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அவன் உயிர் பிழைப்பான் என உறுதியாக கூறவியலாது எனக் கூறி விட்டனர் மருத்துவர்கள்.

மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். எனது தந்தைக்கு கடுமையான காயம் ஏற்பட்டதால் அவர் SKIMS மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்" என்று சோபியா கூறுகிறாள்.

ஜொஹ்ராவை அவளுடைய அத்தை கவனித்து கொள்கிறார். "ஜொஹ்ரா தன்னிடம் உள்ள திண்பண்டங் களை அடுத்த படுக்கைகளில் உள்ளவர்களுக்கு கொடுத்து விடுவாள். ஆனால் அவள் கையில் உள்ள பாட்டிலை மட்டும் யாரும் தொட்டுவிடக்கூடாது (அதில் குளிர்பானம் உள்ளது) எனக் கூறிக் கொண்டே அழுகிறார் அவளின் அத்தை.

"அந்த சிறுவனைப் பாருங்கள். அவன் தொடையில் துப்பாக்கி குண்டு புதைந்துள்ளது" என பாசித் ஏஜாஸ் என்ற சோபியானை சேர்ந்த 14 வயது சிறுவனை காட்டி கதறுகிறார்.

8 வயது ஆசிப் ரஷீதும், 13 வயது மீர் அராஃபத்தும் பெல்லட் குண்டுகளால் காயப்பட்டவர்களே. இவர்கள் அனந்தநாக் பகுதியை சேர்ந்தவர்கள். நூற்றுக்கணக்கான குண்டுகள் அராஃபத்தின் உடலையும் முகத்தையும், அடி வயிற்றையும் துளைத்து உள்ளே சென்று விட்டன.

"அப்பா தயவு செய்து ஏதாவது செய்யுங்கள், வலியால் எனக்கு உயிர்

சோபியான் மாவட்டத்தை சேர்ந்த இன்ஷா மாலிக் என்று 14 வயது சிறுமி பெல்லட் குண்டுகளால் பாதிக்கப்பட்டு இரு கண்களையும் இழந்து விட்டாள். அவளுக்கு இந்த சம்பவம் ஜீலை 12ம் தேதி நடந்தது. அவள் உடலை 100க்கும் மேற்பட்ட பெல்லட் குண்டுகள் தாக்கின. அப்போது அவள் தன் வீட்டிற்குள் இருந்தாள்.

http://www.hindustan times.com/india-news/in-kashmir-pellet-gun-victims-are-as-young-ces-4-years/story-1tmf/pBrulqTw3f5v3/g/html.



# காஷ்மீரை சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மனக் குமுறல்



காஷ்மீர் தன் இறப்பை துக்கம் கொண்டாடும் வேளையில் செய்தி அறைகளில் இருந்து பரிமாறப்படும் வெறுப்பு பிரச்சார செய்திகள் நம் இந்தியாவிற்கு எதிராக தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு விரோதத்தையும் குரோதத்தையும் உருவாக்கி விடும்.

காஷ்மீரில் இத்தகைய கடினமான சூழலின் பிண்ணனியில் படித்து ஐ.ஏ.எஸ்.(I.A.S) தேர்வில் நாட்டின் முதல் மாணவனாக தேறியவர் பைசல் ஷா. தற்போது காஷ்மீரின் பள்ளிக்கல்வித்துறையின் இயக்குனராக பணியாற்றுகிறார்.

புர்ஹான் வாணி கொல்லப்பட்டவுடன் அவருடன் பைசல் ஷாவின் படத்தை இணைத்து செய்திகள் வெளியிட்டன பத்திரிகைகள். இதனை கண்டு மனம் நொந்துபோன பைசல் ஷா தன் முகநூல் வெறுத்துபோய் பின்வரும் பதிவினை பதிவிட்டுள்ளார்.

“என்னுடைய படத்தை கொல்லப்பட் தீவிரவாதி படத்துடன் இணைத்து வெளியிட்டுள்ளதன் மூலம் இந்த தேசிய ஊடகங்கள் மீண்டும் ஒருமுறை பொய்களை பணமாக்கும், மக்களை பிளக்கும், அதிக வெறுப்புகளை உண்டுபண்ணும் தங்கள் மூர்க்கத்தனங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளன”

தனிப்பட்ட பாதிப்பு என்பதை தவிர்த்து ஒரு கேலிக்குரிய விவாதத்தின் ஒரு பங்காகி இருப்பது என்னை மிகவும் காயப்படுத்தி உள்ளது. நான் ஐ.ஏ.எஸ்.பணியில் சேர்ந்துள்ளது வேலை பார்ப்பதற்கா? அல்லது உங்களுடைய சாடிஸ்ட் (அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காணும் மனோ வியாதி) பிரச்சார எந்திரத்தின் ஒரு பகுதியாக மாறவா?

உண்மையில் நான் இந்த பரீட்சையில் தேர்வானபோது என்னுடைய முழு வாழ்க்கையையும் இப்படி நாற்காலியை தேய்த்து கொண்டு காலம் தள்ளப் போகிறேன் என்று நினைக்கவில்லை. என்னை சுற்றியுள்ள இந்த முட்டாள் தனம் இனியும் தொடருமானால் நான் என்னுடைய வேலையினை காலம் தாழ்ந்து அல்ல உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டியிருக்கும்.

என்னுடைய சக பணியாளர் யாசீன் சௌத்ரி அவருடைய முகநூலில் பதிவேற்றம் செய்ததை நான் கூறுகிறேன். ஜீ நியூசோ, ஆஜ்தக், டைம்ஸ் நவ், நியூஸ் எக்ஸ் எதுவும் காஷ்மீர் பற்றிய உண்மை



செய்திகளை உனக்கு சொல்லப்போவதில்லை. நீ உன் தலையை பார்த்துக்கொள்."

எந்த அரசாங்கமும் தன் சொந்த மக்களை காயப்படுத்த விரும்பாது. அப்படி ஓர் அரசாங்கம் தன் சொந்த குடிமக்களை கொல்கிறது காயப்படுத்துகிறது என்றால் அது தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்வதற்கு சமம். தன்னைத்தானே ஊனப்படுத்தி கொள்வதற்கு சமம். எனவே எந்த அரசம் அதன் சொந்த மக்களின் வலியை விட்டு தங்களை தூரப்படுத்திக் கொள்ள முடியாது. இந்த பிரச்சனை கட்டுக்குள் கொண்டு வர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு இன்னும் நேரம் பிடிக்கும்.

அதுவரை நாமெல்லாம் தங்களுடைய TRB ரேட்டிங்கிற்காக காஷ்மீர் பள்ளத்தாக்கை பற்றி எரிய வைக்க நினைக்கும் கெடுமதியாளர்களிடமிருந்து பாதுகாப்பாக பயணிக்க வேண்டியுள்ளது.

காஷ்மீரில் தற்போது நடந்து வரும் கொந்தளிப்பில் உயிர்களை இழந்துவிட்டவர்களளுக்காக தங்கள் பார்வைகளை இழந்தவர்களுக்காக நாம் பிரார்த்திப்போம். இந்த உண்மை தருணத்தில் ஒருவருக்கு மற்றவர் பக்கபலமாக நிற்போம். இதுவரை எனக்கு இணையத் தொடர்பு இல்லை. இணையத் தொடர்பு கிடைத்து என்னுடைய பக்கத்தை பார்த்த பின்னர் இது தான் பேசவேண்டிய நேரம் என்பதை உணர்ந்து கொண்டேன். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜீவூன் (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், மேலும் நிச்சயமாக நாம் அவனிடமே மீள்வோம்).

# மோடிக்கு ஒரு பெண் சிறுமியின் மனம் திறந்த கடிதம்

காஷ்மீரை பூர்வீகமாகக் கொண்ட 17 வயது பெண் ஒருத்தி சிறாள் பிரதம மந்திரி நரேந்திர மோடிக்கு பின் வருமாறு கடிதம் எழுதியுள்ளாள்.

"அன்புடைய திருவாளர் மோடி அவர்களே நாம் காஷ்மீர் மக்களின் நிலைமை குறித்து உண்மையிலேயே கவலைக் கொள்பவர்கள் என்றால் எல்லாவிதமான செய்தி பரிவர்த்தனைகளையும் தொடர்பு சாதனங்களையும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் தடுத்து நிறுத்தி அந்த மக்களின் சுதந்திரத்தை முடக்கி போட்டிருக்க மாட்டோம். அதற்கு பதிலாக அதனை திறந்து விட்டு காஷ்மீர் மக்களின் குரலை அனைவரும் கேட்க செய்திருப்போம்."

அந்த பெண்ணின் பெயர் பாத்திமா ஷஹீன். இவர் தற்போது அமெரிக்காவில் ஜார்ஜியா மாநிலத்தில் வசித்து வருகிறார்.

கடந்த ஜூலை 10ம் தேதி அவர் காஷ்மீரில் உள்ள தன் உறவினர் வீட்டிற்கு வந்தபோது இதுவரை கேட்டிராத நிகழ்வுகளையெல்லாம் கண்டார்.

அந்த பெண் சிறுமி மோடியை பார்த்து மேலும் கேட்டார், "அதென்ன மோடி அவர்களே, நான் செய்தியை பார்த்த போது ஃபிரான்ஸ் தாக்குதல், நைல் (Nile) தாக்குதல் எல்லாம் காட்டப்பட்டன. துருகியின் இராணுவப் புரட்சி குறித்து காட்டப்பட்டது. தென் இந்தியாவின் பருவ மழை குறித்த செய்திகள் எல்லாம் காட்டப்பட்டன. காஷ்மீரைப் பற்றிய செய்திகள் எங்கே மோடி அவர்களே? இதனால் தான் நான் பிறந்த சொந்த மண் குறித்தும் அங்கே என்ன நடக்கிறது என்பது குறித்தும் இத்தனை நாள் எனக்கு தெரியாமல் போனதா?"

"எல்லாருக்கும் காஷ்மீர் தேவை, ஆனால் யாருக்கும் அம்மண்ணை சார்ந்த மக்களின் மீது அக்கறை இல்லை. ஏனெனில் நாம் காஷ்மீர் மக்களின் மீது அக்கறை கொண்டிருப்போமேயானால் புர்ஹான் பானி தீவிரவாதியா போராளியா என்ற மக்களின் கருத்து குறித்து கவலை கொள்ளாமல் புர்ஹான் வானி போன்ற கல்வியில் முதன்மை நிலையில் இருந்த மாணவன் ஏன் தன் கையில் பேனாவை ஏந்துவதை தவிர்த்து துப்பாக்கி ஏந்தினான் என்பது குறித்து புரிந்து கொள்ள முயன்றிருப்போம்"

http://www.ndtv.com/india-news/listen-to-voices-of-agitating-kashimiris-nri-teen-in-open-letter-topm-1438995.

தாய்மையை எதிர்பார்த்து, அது குறித்த காலத்திற்குள் ஏற்படாவிட்டால், அது நமது சமூகத்தில் ஒரு பெரிய பிரச்சனையாக கருதப்படுகிறது. அண்மை காலத்தில் இப்பிரச்சனை சுமார் 10% மக்களிடம் காணப்படுகிறது. இக்குழந்தையின்மை, அனைத்து தரப்பு மக்களையும், பொருளாதார, ஜாதி, மத, இனம் கடந்து பாதிக்கிறது, நம்மில் ஒரு நண்பர், சுற்றத்தார், உறவினர் ஆகியோரில் ஒருவரோ அல்லது நாமோ இந்த உணர்வுபூர்வமான நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இந்த பாதிப்பால் பலர் மன உளைச்சலுக்கும், தொடர் சிகிச்சை, பரிசோதனை போன்ற காரணங்களால் பொருளாதார பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர். பலருக்கு எங்கு, எப்போது இது குறித்த பரிசோதனைகள், சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது அறியாததால் தேவையற்ற பல பரிசோதனைகள், சிகிச்சைகளால் பண விரயம் ஏற்படுகிறது.

குழந்தையின்மை (Infertility) என்பது ஆண் அல்லது பெண் இனப்பெருக்க மண்டலத்தை பாதிக்கும் நோயாகும். குழந்தையின்மை என்பது 12 மாதங்களுக்கு எந்தவித கருத்தடை முறையும் இல்லாமல் தொடர்ச்சியாக தாம்பத்திய உறவிற்க்குப் பின்னரும், 35 வயதிற்கு குறைவான பெண்களோ, அல்லது 35 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 6 மாத உறவிற்குப் பின்பும் கருவுறாமல் இருப்பதாகும்.

குழந்தையின்மைக்கான **Risk:**

1. வயது : பெண்களின் fertility, 32 வயதிற்குப் பின் குறைகிற. பெண்ணின் அண்டச் சுரபி குறைவான அளவு அண்ட அணுக்களே இருக்கும், அண்ட அணுக்கள் ஆரோக்கியம் குறைந்து காணப்படும். மற்ற மருத்துவ

# குழந்தையின்மை
## (Infertility)
## (Dr.S. முஹம்மது அஃப்சல்

நோய்களின் பாதிப்புகள் இருக்கும்.

ஆண்களுக்கு 40 வயதிற்கு மேல் fertility குறைகிறது.

2. புகை பிடித்தல்
3. அதிக அளவு மது அருந்துதல்
4. அதிக உடல் பருமன். அதிக உடல் எடை, பெண் குழந்தையின்மைக்கு முக்கிய காரணமாகும். அதிக எடை உள்ள ஆணிற்கு அசாதாரண விந்துக்களுக்கான வாய்ப்புகள் உள்ளது.
5. முறையற்ற உணவு பழக்கங்கள் (Eating Disorders): உணவில் குறைபாடு காரணமாக, எடைகுறைவு ஏற்பட்டு அதனால் குழந்தையின்மை ஏற்படுகிறது. உடலில் இரும்பு சத்து, Folic Acid மற்றும் Vit.B12 குறைபாடு உள்ளவர்களுக்கு குழந்தையின்மை ஏற்படுகிறது.
6. தினமும் 7 மணி நேரத்திற்கு மேலாக உடற்பயிற்ச்சி செய்பவர்களுக்கு அண்ட வெளியேற்ற (Ovulation) குறைபாடு ஏற்படும்.
7. Gonnorrhoea, Chlamydia போன்ற பால்வினை நோய்கள் பெண்களின் அண்ட நாளத்தை (Fallopian tubes) சேதப்படுத்தலாம். அதேபோல் ஆணின் விரைப்பையில் Inflammation உண்டாக்கலாம்.
8. குழந்தை பருவ நோய்கள், அம்மை, German Measles போன்றவை குழந்தையின்மைக்கு காரணமாகும்.
9. பூச்சிக் கொல்லிமருந்துகள் (Pesticides, Herbicides) மற்றும் lead, infertility உண்டாக்கலாம்.
10. மன அழுத்தம் (Mental Stress) ஒரு காரணமாகும்

பொதுவாக குழந்தையின்மைக்கு, 25% அண்ட வெளியேற்ற குறைபாடு காரணமாகவும், 25% ஆண்களில் காணப்படும் குறைபாடு காரணமாகவும், 25% அண்ட நாள குறைபாடு காரணமாகவும், 17% unexplained காரணமாகவும் , 5% எண்டோ மெட்ரீயோஸீஸ் காரணமாகவும், 4%மற்ற

காரணங்களாலும் ஏற்படுகிறது.

<u>பெண்களிடம் காணப்படும் காரணங்கள்:</u>

<u>1. அண்ட வெளியேற்ற குறைபாடுகள் **(Ovulation Disorders)**:</u>

அண்ட வெளியேற்றம் என்பது மாதந்தோறும் அண்டச் சுரப்பியிலிருந்து அண்ட அணு வெளியேற்றப் படுவதாகும்.

(1) அண்ட சுரப்பி **செயலிழப்பு (Premature Ovarian failure):**

10% குழந்தையின்மைக்கு காரணம் Premature Ovarian failure ஆகும். இதில் பெண்ணின் அண்ட சுரப்பிகள், 40 வயதிற்கு முன்னரே செயல்படுவதை நிறுத்தி விடுகின்றன. மருத்துவ சிகிச்சை காராணமாகவோ, கீமோதெராபி, கதிர்வீச்சு சிகிச்சை காரணமாகவோ அண்ட சுரப்பியில் உள்ள அண்ட அணுக்கள் அழியலாம், அல்லது பல்வேறு காரணஙகளால் அண்ட சுரப்பியின் அண்ட அணு (Follicles) உற்பத்தி அல்லது இருப்பை பாதிக்கலாம்.

**(2) <u>Polycystic Ovarian Syndrome (PCOS):</u>**

இவ்வகை பிரச்சனை 70% குழந்தையின்மை உள்ள பெண்களிடம் காணப்படுகிறது. இதில் பெண்களின் அண்ட உறுப்பு அசாதாரணமாக செயல்படுகிறது. இப்பெண்களிடம் அசாதாரணமாக அதிக அளவில் ஆண்பால் ஹார்மோன்கள் (Androgen) காணப்படும். குழந்தைபேறு வயதுள்ள 5%-10% பெண்களிடம் இந்த வகை குறைபாடு காணப்படுகிறது. இப்பெண்களுக்கு irregular மாதவிடாய் அல்லது மாதவிடாய் வராமல் இருக்கலாம்.

இப்பெண்களுக்கு அண்ட வெளிப்பாட்டை கட்டுப்படுத்தும் பகுதியில் பாதிப்பினால் குறைந்த அளவு LH அல்லது FSH உற்பத்தி, இச்சிறு மாற்றம் அண்ட வெளியேற்றத்தை பாதிக்கலாம்.

(3) <u>விரைவு மாத விடைவு **(Early Menopause):**</u>

இப்பெண்களுக்கு மாதவிலக்கு வருவதில்லை. 35 வயதிற்கு முன்னர் அண்ட Follicles குறையும். காரணம் கண்டறியப்படாவிட்டாலும் புகைபிடித்தல், Immune நோய்கள், கதிர்வீச்சு சிகிச்சை, கீமோதெராபி போன்றவற்றிற்கு தொடர்பு காணப்படுகிறது.

**(4) <u>Hyper Prolactinemia:</u>**

இப்பிரச்சனை 10% குழந்தையின்மை உள்ள பெண்களிடம் காணப்படுகிறது. கர்ப்பம் மற்றும் பாலூட்டு இல்லாத பெண்களில் Prolactin அளவு அதிகமாக இருந்தால் அண்ட வெளியேற்றம் மற்றும் கருவுறுதல் பாதிப்புகளை உண்டாக்கலாம்.

(5) தரமற்ற அண்ட அணுக்கள், மரபணு குறைபாடு உள்ள அண்ட அணுக்களால் கருவுற்றலை தொடர முடியாது. வயது அதிகம் உள்ள பெண்களுக்கு இப்பிரச்சனைக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

2) <u>ஹைப்போதலாமிக் - பிட்யூட்டரி செயல்பாடு குறைபாடு:</u>

கில்மான் சின்ரோம், சீகான் சின்ரோம், Empty stella சின்ரோம், உணவு குறைபாட்டு நோய், மன அழுத்தம், ஹைப்போதராமஸ் அல்லது பிட்யூட்டரி பகுதியில் புற்றுநோய் கட்டிகள், கதிர்வீச்சு அல்லது பாதிப்பு ஏற்படுதல், பாலூட்டுதல், அதிக நேரம் உடற்பயிற்சி காரணமாக குழந்தையின்மை ஏற்படும்.

3) அதிகம் செயல்படும் தைராய்டு சுரப்பி

4) குறைவாக செயல்படும் தைராய்டு சுரப்பி

5) புற்றுநோய், AIDS போன்ற நோய்கள்

6) நீண்ட நாள் கல்லீரல், சிறுநீரக நோய், இரத்த சோகை, சர்க்கரை நோய்

7) Cushing நோய், Turner சின்ரோம், Androgen Insensitirity

2. <u>கருப்பை மற்றும் அண்ட நாளம் **(Fallopian Tubes)** காரணஙகள்:</u>

அண்ட சுரப்பியிலிருந்து வெளியேறும் அண்ட அணுக்கள் கருப்பையை நோக்கி நகர்கிறது. அவை அண்ட நாளத்தில் இறஙகும் வேளையில் கருவுறுதல் நிகழலாம். இந்நிகழ்வின் மூலம் கருமுட்டை கருப்பையில் வளர்கிறது. கருப்பை மற்றும் அண்ட நாளத்தில் குறைபாடு காணப்பட்டால், இப்பெண்களுக்கு இயற்கையான கருவுறுதல் நிகழாது.

1) Pelvice Adhesions-Pelvic தொற்று நோய், அப்பென்டிசைடிஸ் அல்லது Pelvic அறுவை சிகிச்சை காரணமாக அண்ட நாளத்தில் வடு (Scaring) அல்லது சேதம் ஏற்பட்டால் கருவுறுவதில் சிக்கல் ஆகலாம்.

2) சர்விக்ஸ் அறுவை சிகிச்சையினால் ஏற்படும் வடு மற்றும் Shortening காரணமாக கருவுறுவதில் சிக்கல் ஆகலாம்.



3) Submucosal Fibroids கருப்பையின் சுவரில் காணப்படும் Submucosal Fibrioids ஆனது குழந்தைபேறு வயதையுடைய 30% முதல் 40% வரையுள்ள பெண்களிடம் காணப்படும். இதன் காரணமாக கருப்பையில் பதிவது (Implantation) பாதிக்கப்படுகிறது. Fibroids காரணமாக அண்ட நாளத்தில் தடை ஏற்பட்டு விந்து செல் சென்று அண்ட அணுவை அடைந்து கருவுறுவது தடைப்படும்.

4) Endometriosis எண்டோமெட்ரியோஸிஸ்: Pelvic Inflammatory நோய் என்பது பெண்ணின் மேல் இனப்பெருக்க மண்டலத்தில் N. Gonorroheea, C. Trachomatosis போன்ற கிருமிகளால் ஏற்படும் நோயாகும். இதன் காரணமாக எண்டோமெட்ரியோவிஸ், சால்பிஞைசட்டிஸ் (Salphingitis), tubo ovarian abscess, pelvic peritonitis போன்றவை ஏற்படுகின்றன. இதனால் அண்ட நாளத்தில் அடைப்பு, வடு ஏற்பட்டு கரு உருவாவதில் சிக்கல் உண்டாகிறது.

3. மருந்துகள் :

i) வலி நிவாரண மாத்திரைகளான ஆஸ்பிரின், புருபன் அதிக நாட்கள் உட்கொள்வது.

ii) கிமோ தெராபி காரணமாக அண்டச்சுரப்பிகள் செயலிழக்கின்றன.

iii) கருத்தடை மாத்திரைகள்

iv) Progestins

v) மன அழுத்தம் மற்றும் மனநோய் மாத்திரைகள்

vi) கார்டிக்கோ ஸ்டிராய்டுகள் போதை மருந்துகள் உபயோகித்தல்

4. Antisperm Antifbodies – 12% காரணம் கண்டறியப்படாத குழந்தையின்மைக்கு காரணமாக கூறப்படுகிறது. இதனால் விந்து ஒன்றுடன் ஒன்று சேர்ந்து neutralise செய்யப்பட்டு விடுகிறது.

5. Oocyte Membrane Proteins:- அண்ட அணு விந்து செல்லுடன் இணைக்கும் Receptin குறைபாடு அல்லது இல்லாவிட்டால் கரு உருவாக முடியாது.

<u>6. முந்தைய கருத்தடை சிகிச்சைகள்:</u>

7. பூப்படைதல் காலம் கடந்து நிகழ்தல் (Delayed Puberty)

<u>ஆண்களுக்கான காரணங்கள் :</u>

1) விந்துதிரவம் (Semen) :

75% ஆண்களில் காணப்படும் குழந்தையின்மைக்கு அசாதாரண விந்துத் திரவம் காரணமாகும்.

<u>அசாதாரண விந்து திரவத்திற்கான **(Abnormal Semen)** காரணம்:</u>

1) விந்து சுரப்பியில் தொற்று நோய்
2) விந்து சுரப்பியில் புற்றுநோய்
3) விந்து சுரப்பியில் அறுவை சிகிச்சை
4) விந்து சுரப்பி அதிகம் வெப்பம் அடைவது, அதிக வெப்ப பகுதியில் பணி செய்வது, இறுகிய ஆடை.
5) Varicocele – விரைப் பையில் காணப்படும் நரம்பு சுருட்டு காரணமாக வெப்பம் அதிகரிக்கும்.
6) Undescended விந்து சுரப்பி-விந்து சுரப்பி விரைப் பையில் இல்லாமல் வயிற்றுப் பகுதியில் காணப்படுவது. இதன் காரணமாக ஆரோக்கியமான விந்து செல் உற்பத்தியாவது பாதிப்படைகிறது.
7) விந்து பீச்சு நாளம் (Ejaculatory) பகுதியில் தடை அல்லது அடைப்பு ஏற்பட்டால், அசாதாரண விந்து திரவம் ஏற்படும்

<u>2) குறைந்த விந்து எண்ணிக்கை:</u>

வழக்கமாக ஒரு முறை வெளியேற்றப்படும் செமன் பொருளில் 50 மில்லியன் விந்து செல்கள் வரை அமைந்திருக்கும்.

20 மில்லியன் விந்து செல்கள் ஒரு மில்லி லிட்டர் விந்து திரவத்தில் இருப்பது normal ஆகும். இந்த எண்ணிக்கை 10 மில்லியனுக்கு குறைவாக காணப்பட்டால் Subfertility ஆகும்.

3. விந்து செல்கள் இல்லாமல் இருத்தல்

4. குறைந்த விந்து நீந்தும் தன்மை (Decreased Motility)

5. அசாதாரண விந்து செல் (Abnormal sperm)

விந்து செல்களின் அமைப்பு மற்றும் நீந்தும் தன்மையில் மாற்றம் அல்லது குறைபாடு காணப்பட்டால், அவை அண்ட அணுவைச் சென்றடைவதில் சிக்கல் ஏற்படலாம். இதனால் கருவுறுவது தடைபடுகிறது.

6. Hypo Gonadism காரணமாக Testosterone குறைபாடு காணப்படும். இதனால் குறைந்த விந்து எண்ணிக்கை இருக்கும்.

7. மரபணு கோளாறு (Genetic Abnormalities)-Klinefelter's சின்ரோம் இதில் விந்து சுரப்பி அசாதாரணமாக காணப்படும், இதனால் விந்து எண்ணிக்கை குறையும்.

8. அம்மைகட்டு (Mumps)- பூப்படைதலுக்கு (Puberty) பின்னர் நோய் ஏற்பட்டால், விந்து சுரப்பியில் ஏற்படும் inflammation காரணமாக விந்து உற்பத்தி பாதிக்கும்.

10. Cystice fibrosis

11. கதிர் வீச்சு

12. இரத்த சோகை, Cushing's synhrome சர்க்கரை நோய், தைராய்டு பிரச்சனைகள்

<u>13. மருந்துகள் :</u>

i) Sulfasalazine என்ற, Crohn's நோய் மற்றும் வாத நோய்க்கு பயன்படுத்தும் anti inflammatory மாத்திரை விந்து எண்ணிக்கையை குறைக்கும்.

ii) Body Builders பயன்படுத்தும் Anabolic ஸ்டீராய்டு, நீண்ட நாட்கள் உபயோகித்தால் விந்து எண்ணிக்கை குறைக்கும்.

iii) கீமோ தெராபி

iv) கர்ப்பிணிகள், அசிட்டமினோபின் மாத்திரை அதிகம் உட்கொண்டால் கருவின் Testicular திசுவை பாதித்து டெஸ்டோஸ்டிரோன் உற்பத்தியை குறைக்கும்.

<u>குழந்தையின்மை பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் யார், எப்போது செய்யவேண்டும்:</u>

1. 12 மாதஙகள் எந்தவித கருத்தடை முறையும் இல்லாமல், தொடர்ச்சியான தாம்பத்திய உறவிற்க்கு பின்னரும் கருவுறாத, குழந்தையின்மைக்கான மற்ற risk காரணஙகள் எதுவும் இல்லாத, 35 வயதிற்கு உட்பட்ட பெண்கள், மற்றும் அவர்களின் கணவன்.

2. 6 மாதஙகள் எந்த வித கருத்தடை முறையும் இல்லாமல் தொடர்ச்சியாக தாம்பத்திய

உறவிற்கு பின்பும் கருவுறாமல் உள்ள 35 வயது முதல் 40 வயது வரை உள்ள பெண்கள்.

3. 6 மாதஙகளுக்கு குறைவான காலமாக இருந்தாலும் கீழ்கண்ட பெண்களுக்கு பரிசோதனைகள், சிகிச்சை உடனே செய்ய வேண்டும்.

i) 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்.

ii) Oligyo amenorrhoea மற்றும் மாதவிடாய் வராத பெண்கள் (amenorrhoea)

iii) கீமோ தெராபி, கதிர்வீச்சு சிகிச்சை அல்லது முற்றிய நிலையில் எண்டோமெட்ரீயோஸிஸ் உள்ள பெண்கள்

iv) கருப்பை மற்றும் நாள நோய் உள்ள பெண்கள்

v) விரை அறுவை சிகிச்சை, Impotence, 18 வயதிற்கு மேல் அம்மை நோய் (Adult mumps), கிமோ தெராபி, கதிர்வீச்சு மற்றும் Sexual dysfunction உள்ள ஆண்களை திருமணம் செய்துள்ள பெண்கள்

மேற்கூறிய அனைத்து தரப்பு பெண்களின் கணவர்களும், குழந்தையின்மைக்கான பரிசோதனைகள், மருத்துவ ஆலோசனைகள் செய்து கொள்ள வேண்டும்.

<u>ஆண்களுக்கான பரிசோதனைகள்:</u>

1. பொதுவான மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆண் இனபெருக்க உறுப்புகள் பரிசோதனை

2. விந்து திரவ பரிசோதனை (Semen Analysis)

3. Testosterone ஹஹஹ

4. அல்ரா சவுண்ட் ஸ்கேன்

5. Chlamyolia பரிசோதனை

<u>பெண்களுக்கான பரிசோதனைகள் :</u>

1. பொதுவான மருத்துவ பரிசோதனை , Gynae cological பரிசோதனை

2. இரத்த பரிசோதனை

Progesterone அளவு - மாதவிலக்கு (Mensus) வருவதற்கு 1 வாரம் முன்பு செய்ய வேண்டும்.

3. Hystero Salpingography – அண்ட நாளத்தில் அடைப்பு உள்ளதா என கண்டறிய செய்யப்படும் பரிசோதனை.

4. லாப்பிரோஸ்கோப்பி: Endometrossis, வடு, அடைப்பு கருப்பை மற்றும் அண்ட நாள குறைபாடுகள் குறித்து அறிய பரிசோதனை செய்யப்படுவது.

5. அண்டச் சுரப்பி (Ovarian) Reserve பரிசோதனை:

அண்ட வெளியேற்றத்திற்குப் பின் அண்ட அணுவின் திறன் குறித்து அறிய செய்யப்படும் பரிசோதனை

i) 3 -ஆம் நாள் FSH அளவு

ii) Anti mullerian Hormone அளவு

iii) Clomiphene Citrate Challenge பரிசோதனை

iv) Antral Follicle count – USG / Transvaginal USG மூலம் கருப்பை, அண்ட நாளஙகள், அண்ட சுரப்பிகள் போன்றவற்றின் நிலை அறியப்படும்.

6. Chlamydia பரிசோதனை

7. தைராய்டு செயல்பாடு குறித்த இரத்த பரிசோதனை (Thyroid function test)

8. FSH, LH அளவு

ஆண்களுக்கான சிகிச்சை :

1. Premature Ejaculation :

தாம்பத்திய உறவின் போது மிகவும் விரைவாக ஆணின் விந்துத் திரவம் வெளியேறுவது. இவை ஒரு சிறிய Stimulus இல் நிகழலாம். போதை மருந்து, மது, புகையிலை, Hormone பிரச்சனை, மன அழுத்தம், மன உளைச்சல், சில மருந்துகளின் பக்க விளைவு காரணமாக இப்பிரச்சனை ஏற்படலாம். சராசரியாக ஆணிற்கு உறவின் போது 4-8 நிமிடஙகளில் விந்துத் திரவம் வெளியேற்றப்படும். இதுவே 2

நிமிடத்திற்கு குறைவான நேரமாக இருந்தால் அது Premature Ejaculation ஆகும்.

புகைப்பிடித்தல், போதை மருந்து, மது போன்றவற்றை தவிர்த்தல், Counselling, Relaxation மூலம் தீர்வு காணலாம்.

Paroxetine, depoxetine போன்றவற்றை உபயோகிக்கலாம். ஆனால் இவை காரணமாக Ereetile Dysfunction பிரச்சனை ஏற்படலாம். Topical மருந்துகள் உபயோகித்தால் நன்மை கிடைக்கும் Sildenafil மாத்திரை மூலம் Ejaculation நேரம் அதிகரிக்கும்.

2.**Erectile Dysfunction:**

தாம்பத்திய உறவின் போது ஆண் உறுப்பு விரைப்பு தன்மையில் இருப்பதில் பாதிப்பு ஏற்படுவது. உலகம் முழுவதும் 13%-28%, 40-80 வயதுள்ள ஆண்களிடம் இந்த பாதிப்பு உள்ளது. இந்த பாதிப்பு mild, moderate, severe என்று 3 வகைப்படும்.

உடல் பருமன், மன (Psychogenic) நாளமில்லா சுரப்பி காரணங்கள், (Endocrine causes), நரம்பு தொடர்பான காரணங்கள், இரத்த ஓட்டம், மருந்து (Methyl dopa, atenolol, clonidine, verapamil, prozocine) தொடர்பான காரணங்கள், அல்லது கலவையான காரணங்களால் இந்நோய் ஏற்படுகிறது. 5% பேருக்கு காரணம் கண்டறியப்படவில்லை.

Vasular assessment, Neurological assessment (Penile Biothisiometry) ஹார்மோன்கள் அளவு (Testoterone, LH, FSH, T3, T4, Prolactin cortisol)

Sexual function அதிகரிக்க சர்க்கரை நோயாளிகள் இரத்ததினால் சர்க்கரையின் அளவை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

I <u>**(i)** மாத்திரைகள்:</u>

(i) Sildenafil – 30 முதல் 60 நிமிடங்களில் செயல்பட துவங்கும், 4 மணி நேரம் வரை மருந்து நீடிக்கும் இதய நோய்க்கு nitrate மாத்திரை உபயோகிப்பவர்கள் கண்டிப்பாக இம்மாதிரையை தவிர்க்க வேண்டும்.

(ii) Fadelifil – அதிக நேரம் வேலை செய்யும்

(iii) Vandenafil

2) Intra cavernosal Vasoactive Injections இவை இரண்டாம் நிலை சிகிச்சையாக செய்யப்படுகிறது.

3) Vaccum Erective Device

4) Intra Urethral Suppositiories

5) Testoterone replacement therapy இவை Primary Gonadal defect காரணமாக testosterone அளவு குறைவாக காணப்படுவர்களுக்கு செலுத்தப்படும்

II. Counselling

IV. Variocele லுக்கான அறுவை சிகிச்சை

V. விந்து நாளத்தில் (Epididymis) உள்ள அடைப்பை சரி செய்ய அறுவை சிகிச்சை

<u>பெண்களுக்கான சிகிச்சை:</u>

1. அண்ட வெளியேற்ற குறைபாட்டுக்கான சிகிச்சை:

2/3 பகுதி பெண்கள் இவற்றின் மூலம் கருவுறுவர்.

1) கிளோமிபின் (Clomifene) மாத்திரை

2) PCOS குறைபாடு உள்ளவர்களுக்கு மெட்பார்மின்

3) Human Menopausal Gonadotropin இந்த ஊசி பிட்யூட்டரி குறைபாடு காரணமாக தரமாக அண்ட வெளியேற்றம் முடியாத பெண்களுக்கு பயன்படும்.

4) Follicle Stimulating ஹார்மோன்.

5) Human Chroinic Gonadotropin இவை Clomifene, FSH மற்றும் HMG யுடன் செலுத்தப்படும்.

6) GNRH Analogues முதிர்ச்சி அடைவதற்கு முன் அண்ட அணு வெளிரேற்றம் நிகழ்பவர்களுக்கு இவை செலுத்தப்பட்டு வளர்ச்சி முறையாக நடைபெற செய்யப்படும்.

7) Bromocription- Prolactin உற்பத்தியை தடுக்கும்.

Fetility மருந்து, ஊசிகள் ஒன்றிற்கும் மேற்பட்ட கர்ப்பத்தை (Multiple pregnancies) உண்டாக்கும்.

*அறுவை சிகிச்சைகள் :*

*1. அண்ட நாள அறுவை சிகிச்சை*

*2.* Laproscopic *அறுவை சிகிச்சை*

*செயற்கை கருத்தரிப்பு* **(Assisted Conception):**

*இம்முறைகள் பெண்ணின் கருப்பை ஆரோக்கிய மானதாகவும்,* fertility *மருந்துகளுக்கு நல்ல* response *மற்றும் இயற்கையாக அண்ட வெளியேற்றம் நிகழ்பவர்களுக்கும் பயன்தரும்.*

**IUI ( Intra Uterine Insemination):**

*இம்முறையானது ஆணின் விந்து எண்ணிக்கை குறைவு, நீந்தும் தன்மை குறைபாடு அல்லது* infertility*-க்கு தகுந்த காரணம் கண்டறியப்படாமல் இருத்தல்,* Erectile dysfunction *உள்ள ஆண்களுக்கு பெரிதும் பயன்தரும்.*

*இம்முறையில்* fine catheter*, சர்விக்ஸ் வழியாக கருப்பையினுள் செலுத்தப்பட்டு அதன் வழியாக விந்து நேரடியாக கருப்பையினுள் செலுத்தப்படும். இந்த முறை அண்ட வெளியேறுதல் நிகழும் சமயத்தில் செய்யப்படும்.*

**I.V.R. (Invirto fertilisation):**

*இந்த முறை, இரண்டு அண்ட நாளஃகளும் அடைப்பட்டுள்ள போது பெரிதும் பயன் தரும்.*

*விந்து செல், அண்ட அணுவுடன் இணைந்து* Petri Dish*-ல் வைக்கப்படும். கருவுற்ற* embryo *பின்னர் கருப்பையில் வைக்கப்பட்டு கர்ப்பம் தொடரச் செய்யப்படும். சில சமயம் அக்கரு* frozen *செய்யப்பட்டு* (Cryo preserved) *எதிர் காலத்தில் உபயோகிக்கப்படும்.*

**I.C.S.I. (Intra Cytoplasmic sperm Injection):**

I.V.F. *மூலம் ஒரு விந்து அணு, முட்டையினுள் செலுத்தபட்டு கரு உருவாக்கப்பட்டுகிறது. இம்முறையில் மூலம் விந்து அணு எண்ணிக்கை குறைவானாலும் கூட கரு உருவாக வாய்ப்புகள் அதிகம் உள்ளன.*

*அறுவை சிகிச்சை மூலம் விந்து எடுத்தல்:*

*இம்முறையில் விந்து ஆண்* Vas deferens*, விந்து சுரப்பி அல்லது* epididymis *இருந்து எடுத்து செலுத்தப்படுகிறது.*

**Assisted Hatching:**

*முந்தைய* I.V.F. *தோல்வி, குறைவான கரு வளர்ச்சி, வயதான பெண்களுக்கு இம்முறை பின்பற்றப்படுகிறது.*

*விந்து செல் அல்லது அண்ட அணு தானம், வாடகை தாய் போன்ற இல்லாத்திற்கு புறம்பான முறைகள் உள்ளன.*

*பெரும்பாலான தம்பதியினருக்கு, பெண் அதிகம் கருவுற வாய்ப்புள்ள நாட்கள் (*11 *முதல்* 16 *நாட்கள்) குறித்த அறியாமையின் காரணமாக கருவுறுவது தாமதம் ஆகிறது.*

**Infertility** *சிகிச்சையால் ஏற்படும்* **Complications:**

1. Ovarian Hyper Stimulation Syndrome:

*அண்ட சுரப்பிகள் பெரிதாகி, வலி, சிறுநீர் கறுப்பாக செல்லுதல், வயிற்று போக்கு, வாந்தி, குமட்டல் போன்றவை வரும். சிலருக்கு கல்லீரல், சிறுநீரக பாதிப்பு, மூச்சு திணரல் ஏற்படும்.*

*2. கரு, கருப்பையின் வெளியில் உருவாகுதல்* Ectopic pregnancy.

*3. இரத்த போக்கு, தொற்று நோய்கள்*

*4. பிறவி குறைபாடுகள்*

*5. எடை குறைவு*

*குழந்தையின்மை உள்ளவர்கள்* Reproductive Endocrinoligist, infertility specialist, *மகப்பேறு மருத்துவர் அல்லது* Urologist *ஆகியோரிடம் மருத்துவ ஆலோசனை செய்ய வேண்டும்.*

*முறையான உடற்பயிற்சி, புகையிலை, மது போன்றவற்றை தவிர்த்தல்:* caffeine *அளவை கட்டுப்படுத்துதல் (தினமும்* 250 mg *மட்டும்): தேவையற்ற மருந்து, மாத்திரைகள் தவிர்த்தல்: அளவான, சத்தான உணவு போன்றவற்றின் மூலம் குழந்தையின்மை தவிர்க்கலாம்.*


பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி
அன்புடன்



# பெண்களுக்கெதிரான குற்றங்களும் மற்றும் சட்டரீதியாக இழைக்கப்படும் அநியாயங்களும்




சமுதாயம் இதுவரை கவனிக்காத சமூகத்தில் நலிவடைந்த வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்பட்டு வாழும் பெண்களைப் பயன்படுத்தி அவர்களை சீரழித்து அவர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கும் ஒரு மிக மோசமான சமூக சீரழிவிற்கும் பெண்ணினத்திற்கும் எதிரான தொழிலான பாலியல் தொழிலில் நடைபெறும் அவலங்களைத்தான் இங்கு நான் எடுத்துரைக்க வியம்புகிறேன்,

சமூகம் இதுவரை இப்பகுதியில் நடைபெறும் சமூகக் கேடுகளையும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் அநீதிகளையும் அறியாமலேயே இருந்து வந்துள்ளது, அதனை கவனத்தில் கொண்டு அந்த பெண்களுக்கு நடைபெறும் சீரழிவுகளுக்கு காரணம் பற்றியும். அது போன்ற பெண்கள் பாதிக்கப்படுவதிலிருந்து தடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றி தகுந்த நல்வாழ்வு வழங்குவதற்கு ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ளவும் வேண்டியது காலத்தின் மிக மிக அவசரமான அவசிமயான தேவையாகும்,

பாலியல் தொழில் என்பது சமூகத்தின் சீர்கேடு என்பதில் இஸ்லாமிய சமூத்திற்கு எள் முனையளவும் ஐயம் இல்லை. அதே சமயத்தில்

21ம் நூற்றாண்டின் சமுதாய பாதுகாவலர்கள் என்று தங்களை முன்னிலைப்படுத்தும் பெண்ணியவாதிகளும். மற்ற தலைவர்களும் பாலியல் தொழிலுக்கு அங்கீகாரம் வழங்கவேண்டியது தற்காலத்தின் அவசியம் என வாதிடுவதை பார்க்க இயலுகிறது,

இந்த பாலியல் தொழிலால் பாதிக்கப்படுபவர்கள் யார்? அதில் ஈடுபடுத்தப்படுபவர்கள் யார்? என்பதை சமுதாய அக்கறையுடன் அணுக வேண்டியது அவசியமாகும், சமீப காலமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு நீதிமன்றங்களின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களில் சுமார் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் யார் என்றால் அது முஸ்லிம் சமுதாயத்தை சேர்ந்த பெண்கள்.

ஏன் இவர்கள் இந்த தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார்கள்? எப்படி இந்த தொழிலுக்குள் அழைத்து வரப்பட்டார்கள்? சமுதாயம் ஏன் இந்த இழி செயலுக்கு ஆட்பட்டது என்ற வினாக்களுக்கான விடைகளைக் காண அந்த பெண்களுடன் உரையாடும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அதன் உண்மைத் தன்மையைக் கண்டறிய சென்ற எனக்கு மிகப்பெரிய அதிர்ச்சிகள் காத்திருந்தன.

பங்களாதேஷ், மேற்கு வங்காளம், பெங்களூர், ஆந்திரா போன்ற இடங்களில் உள்ள இளம் வயது பெண்கள் குறிப்பாக வயது வரம்பு 16 முதல் 25 வயதிற்கிடையில் உள்ள பெண்கள் தங்கள் குடும்பத்தில் தந்தையின் இறப்பு, வயது முதிர்ந்த தாய், தங்களுடன் பிறந்துள்ள மற்ற பெண் குழந்தைகள், கணவனால் கைவிட்டு செல்லப்பட்ட இளம் பெண்கள், குடும்பத்தைக் காப்பாற்ற வேலைத் தேடியபோது. தங்கள் வீட்டருகே வசிக்கும் பெண்கள் மற்றும் வேறு நபர்கள். சென்னையில் நல்ல வீட்டு வேலைகள் உள்ளது, அதிக ஊதியம் கிடைக்கும் எனப் பல்வேறு ஆசைகளைக் கூறி சென்னைக்கு அழைத்து வந்து அவர்களை சென்ட்ரல் ரயில் நிலையத்திலேயே பாலியல் தொழில் செய்யும் வல்லூறுகளிடம் ஒப்படைத்து விட்டு விற்று விட்டுச் சென்று விடுகின்றனர்,

வல்லூறுகளிடம் சிக்கிய இளம் பெண்கள் வேலைக் கிடைக்கும் என்ற தேடுதலில்



அவர்களுடன் சென்று பார்த்தபோது, அவர்கள் வீடுகளில் குறுகிய அறைகளில் அடைத்து வைக்கப்பட்டு பாலியல் தொழில் செய்தால், நிறைய பணம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறியும், சம்மதிக்காவிடில் வீட்டிற்கு செல்ல முடியாது என்று அச்சுறுத்தி மிரட்டியும். வேறு வழியில்லாமல் தங்கள் நிலையையும் குடும்ப சூழ்நிலையையும் நொந்து அதற்கு பணிந்து பாலியல் தொழிலுக்கு தள்ளப்பட்டதாகவும். பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணீர் மல்க கதறினார்கள்,

அதைத் தொடர்ந்து தங்களை யாராவது காப்பாற்ற வரமாட்டார்களா? என்ற வேண்டுதலுடன் காத்திருந்தவர்களுக்கு இறைவனிடமிருந்து உதவி வந்ததாக கருதும் வகையில் போலிசார் வந்து தங்களை மீட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி காப்பகத்தில் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர், அதன் பிறகு காப்பகத்தில் தாங்கள் உள்ள விவரங்களை அறிந்த தங்கள் உறவினர்கள், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மகள், அப்பா, அம்மா ஆகியோர்கள் தத்தமது உறவினர்கள் நீதிமன்றத்தில் மீட்டுச் செல்ல மனுத் தாக்கல் செய்த போது. நீதிமன்றமோ தங்கள் உறவினர்களிடம் போதுமான ஆவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றும் அவர்கள் அளிக்கும் வாக்குமூலங்களும் பாதிக்கப்பட்ட பெண்கள் அளிக்கும் வாக்குமூலத்திலும் உள்ள சிறு சிறு சங்கதிகளை பெரியதாக கருதி பாதிக்கப்பட்ட பெண்களை பாலியல் தொழில் வல்லூறுகளிடமிருந்து மீட்டு அவர்களுக்கு சரியான வாழ்க்கை அளித்து பாதுகாப்பு அளித்ததாக பெருமிதம் கொண்டு Immoral Traffic Prevention Act சட்டம் பிரிவு 17(4)ன் கீழ் மேற்கண்ட பாதிக்கப்பட்ட பெண்களை பாதிக்கப்பட்ட பெண்களின் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக ஓர் ஆண்டிற்கு காப்பகத்தில் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிடுகிறது,

காப்பகம் என்பது பாதுகாப்பற்ற பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், அவர்களை நெறிமுறைப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட நிலையமாகும், ஆனால், இந்த காப்பகங்களில் ஏற்கனவே பாலியல் வல்லூறுகளால் சிறை பிடிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு பிறகு போலிசாரால் மீட்கப்பட்டு வெளி உலகிற்கு வந்த பெண்கள் தங்கள் குழந்தைகள்-வயதான பெற்றோர்-உறவினர்கள் ஆகியோரை தங்களின் குடும்ப ஏழ்மையினால் பாதுகாப்பதற்காக வேலைத் தேடி வந்தவர்களை மீண்டும், தங்கள் குழந்தைகள்-வயதான பெற்றோர்-உறவினர்கள் மீட்டெடுக்க வந்தபோது, அவர்களை அவர்களது குழந்தைகள்-வயதான பெற்றோர்-உறவினர்களுடன் ஒப்படைக்காமல். காப்பகத்தில் ஓர் ஆண்டு வைத்திருக்கவேண்டும் என உத்தரவிட்டதானது, பாதிக்கப்பட்ட பெண்களை மேலும் ஒரு சிறைச்சாலையில் தள்ளியதற்கு சமமாகவே அவர்கள் கதறுகிறார்கள்,

பாதிக்கப்பட்ட பெண்களில் சிலர் கூறும் வாக்குமூலங்களை கேளுங்கள்....

ஒரு பெண் தனது இளம் வயது இரண்டு பெண் குழந்தைகளை விட்டு விட்டுச் சென்ற கணவனை நொந்து உறவினர்களிடம் அவர்களை ஒப்படைத்து விட்டு வேலைத் தேடி சென்னை வந்தபோது. பாலியல் வல்லூறுகளின் கையில் சிக்கி பின் மீட்டெடுக்கப்பட்டு காப்பகத்தில் இருந்தாள்.

"தனது மகள் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தபோது போதுமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என நீதிமன்றம் தீர்மானித்து தன்னை ஓர் ஆண்டு காப்பகத்தில் வைத்திருக்க உத்தரவிட்டது. மனுத் தாக்கல் செய்தது எனது மகள் தான் என்று நான் நீதிமன்றத்தில் கதறியும், எனது மகள் பாதிக்கப்பட்டது எனது அம்மா தான் என்று கதறியும், அவை நீதிமன்றத்தின் காதில் விழாமல் நீதிமன்றம் ஆவணங்களை மட்டுமே கேட்டு போதுமான ஆவணங்கள் இல்லை எனக் கூறி நிராகரித்தது. எனது ஒரே ஒரு கோரிக்கை இது தான்.

மனுத் தாக்கல் செய்தது எனது மகள் இல்லை என நீதிமன்றம் (ஆவணங்களை முன்னிலைப்படுத்தாததால்) கருதியிருக்கும் பட்சத்தில் எங்கள் இருவரையும் மரபணு சோதனைக்கு உட்படுத்தி உண்மையைக் கண்டறிந்திருக்கலாம், ஆனால் அதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் உத்தரவிட்டது எனக்கு பாதுகாப்பு வழங்கவா? அல்லது மேற்கொண்டு எனது குடும்பத்தை சீரழிக்கவா? நான் காப்பகத்தில் இருக்கும் ஒரு ஆண்டு காலத்தில் என் இளம் வயது பெண்களின் நிலை என்னவாகும்? அவர்களை யார் பாதுகாப்பார்கள்? என்பது எல்லாம் கேள்விக்குறி?"

மற்றொரு பெண் கூறுவதைக்

கேளுங்கள். போலிசார் தங்களை மீட்டு எடுக்கும்போது. தன்னுடன் நான்கு பெண்களை போலிசார் மீட்டதாகவும். அதில் ஒருப் பெண் விருப்பப்பட்டு தனது அம்மாவின் வலியுறுத்தலின் பேரில் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக கூறினார். எங்கள் நால்வரில் போலிசார் கேட்டத் தொகைகளை வழங்கிய இரண்டு பெண்களை உடனடியாக போலிசார் விடுவித்து விட்டனர். ஏற்கனவே, வறுமையில் வேலைத் தேடி வந்த வழக்கில் மீட்டதாக முன்னிலைப்படுத்தி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

ஆனால், அங்கோ எனது கணவர் என்னை மீட்டெடுக்க மனுத் தாக்கல் செய்தபோது, என்னிடம் நீதிமன்றம் திருமணம் எப்போது ஆனது? என்றுக் கேட்டபோது 17 ஆண்டுகள் ஆனது என்று கூறினேன். எனது கணவரிடம் கேட்டபோது 2000ல் திருமணம் ஆனது என்று கூறினார், இவை இரண்டும் முரண்படுகிறது



என்னையும் என் போன்ற மற்றொரு பெண்ணும் பாலியல் தொழில் வல்லூறுகளிடமிருந்து மீட்ட போலிசார் எங்களிடம் எதனடிப்படையில் பணம் கேட்டார்கள் என்பதும் அவர்கள் உண்மையில் என் போன்றவர்களை காப்பாற்ற வந்தவர்களா? அல்லது பாலியல் தொழில் வல்லூறுகளின் ஏஜெண்ட்களா? என்ற ஐயம் எழுந்த நிலையில் பணம் அளிக்காத காரணத்தால் எங்களை என்றும் திருணம சான்றிதழ்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும் கூறி நீதிமன்றம் என்னை எனது கணவருடன் ஒப்படைக்க மறுத்து ஓர் ஆண்டு காலம் காப்பகத்தில் வைத்திருக்க உத்தரவிட்டது,

மற்றொரு பெண் கூறுவதைக் கேளுங்கள்...போலிசார் தங்களுடன் தங்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய வல்லூறுகள்

இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதாகவும். என்னை மீட்க வந்த சகோதரியின் மனுத் தள்ளுபடி செய்யப்பட்டு ஓர் ஆண்டு காப்பகத்தில் வைத்திருக்க உத்தரவிடப்பட்டது, அதே சமயத்தில் அந்த வல்லூறுகள் 15 நாட்களில் சிறையிலிருந்து பிணையில் வெளியில் வந்து விட்டனர். அவர்கள், தங்கள் மீதான வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் எதிரிகளுக்கு தலா ரு,3.500- அபராதம் மட்டும் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அப்படியானால் பாதிக்கப்பட்ட எங்களுக்குத் தான் தண்டனை அதிகமா?

என்ன சட்டம் என்ன நீதி? பாதிக்கப்பட்ட எங்களிடம் போலிசாரும் பணம் எதிர்பார்க்கிறார்கள். மனுத் தாக்கல் செய்ய வழக்கறிஞர்கள் பெரும் தொகை எதிர்பார்க்கிறார்கள். அதன் பிறகு நன்னடத்தை அலுவலர்களும் பெரும் தொகையை அளித்தால்தான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யமுடியும் என்கிறார்கள். ஏற்கனவே, பணம் இல்லாததால், குடும்ப தேவைகளுக்காக வேலை தேடி வந்த எங்களிடம் எல்லோரும் பணம் கேட்பது சரிதானா? வேறு வழியில்லாமல் அனைத்தும் கடன் வாங்கி வழங்கிய பிறகும் என்னால் காப்பகத்திலிருந்து வெளியில் செல்ல முடியவில்லை, கீழ் நீதிமன்ற உத்தரவின் மீது மேல்முறையீடு செய்ய இதற்கு மேல் எங்களிடம் பணமும் இல்லை. வழியும் தெரியவில்லை,

பாதிக்கப்பட்ட பெண்களின் குமுறல்களை கவனித்ததில், அதில் ஒரு விக்ஷயம் தெரிய வருகிறது. அதாவது, ஏற்கனவே தங்கள் குடும்ப ஏழ்மை சூழ்நிலைக் காரணமாக வேலைத் தேடி வந்த பெண்கள் பாலியல் வல்லு}றுகளின் பிடியில் சிக்கி சீரழிந்த நிலையில். அவர்களை பாதுகாக்க வந்ததாக கூறிய போலிசார் பாதிக்கப்பட்ட பெண்களிடமே பணம் கேட்டதும். அவர்களால் பணம் அளிக்க இயலாததால் அந்த பெண்களை மீட்டதாக மார்தட்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

அதன் பிறகு நீதிமன்றத்தில் அந்த பெண்களை மீட்டெடுக்க வந்த அவர்களது உறவினர்களிடம் மனுத்தாக்கல் செய்வதாகவும் அவர்களுக்கு உதவுவதாகவும் சொல்லி வழக்கறிஞர்கள் என்றுக் கூறி பெரும் தொகையை வழக்கறிஞர்கள் பெற்றுக் கொள்கின்றனர். அதன் பிறகு நீதிமன்றம் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் மனுத் தாக்கல் செய்தவர்களின் உறவுமுறைகளை கண்டறிய நன்னடத்தை அலுவலர்களின் அறிக்கையை பெற உத்தரவிடுகிறது, அந்த அரசு ஊழியர்களான நன்னடத்தை அலுவலர்களும் அறிக்கை வழங்க குறைந்தது ரூ.10.000- கேட்டுப் பெற்றுக் கொள்கின்றனர்.

அதன் பிறகும் நீதிமன்றம் பாதிக்கப்பட்ட பெண்களை அவர்களது உறவினர் வசம் ஒப்படைக்காமல் ஓர் ஆண்டு காப்பகத்தில் வைக்க உத்தரவிடுவதானது இந்த பெண்களை பாதுகாக்கும் நோக்கில் அரசு இயந்திரம்-சமூகம் செயல்படுகிறதா? அல்லது பாலியல் வல்லூறுகளுக்கு உதவும் வகையில் செயல்படுகிறதா? என்ற மிகப் பெரும் கேள்வி எழுகிறது.

இது போன்ற பல பெண்களின் கண்ணீர் கதைகளை இங்கு குறிப்பிட்டால் அதன் ஈரம் காகிதங்களை நனைத்து எழுத்துக்களை கரைத்துவிடும் என்பதால் அவர்களுக்கு ஏற்பட்ட துயரங்களில் சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் இங்கே குறிப்பிட்டுள்ள துயரங்களில் சென்னையில் நடைபெற்றவை மட்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற வகையில் இந்தியா முழுவதும். இதுபோன்ற பாதிப்புகள் பெண்களுக்கு பாலியல் தொழிலால் உடல் வளர்க்கும் வல்லூறுகளால் ஏற்படுகிறது என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்,

உயர்நீதிமன்றம் சமீபத்தில் பெண் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பாக மிகுந்த கவலையை முன்னிலைப்படுத்தியது. சமீப காலமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பல்கி பெருகி வருகிறது என்பது பல்வேறு ஆய்வுகளில் தெரியவரும் உண்மையாகும். அதில் மிக மிக மோசமான குற்றமானது பெண்களின் ஏழ்மையை மூலதனமாகக் கொண்டு அந்த பெண்களிடம் நல்ல வேலை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தைக் கூறி மொழி தெரியாத இடத்திற்கு வரவழைத்து பாலியல் தொழில் வல்லூறுகளிடம் விற்றுவிட்டு செல்வதும் அதன் பிறகு அவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதுமாகும்.

இதுபோன்ற குற்றங்கள் போலிசாரால் மிக மிக சொற்ப அளவிலேயே கண்டறியப்பட்டு மிக மிக சொற்ப அளவிலேயே பாதிக்கப்பட்ட பெண்களும் மீட்டெடுக்கப்படுகிறார்கள், ஆனால். அவ்வாறு மீட்டெடுக்கப்பட்ட பெண்களும், அதன் பிறகு சட்டரீதியான போராட்டங்களுக்காக தங்கள் குடும்பத்தினர்-உறவினர்களின் பெரும் கொண்ட பொருளாதாரம் செலவிடப்பட்ட பிறகே அவர்களுடன் சேர முடிகிறது. அதுவும் மிக மிக சொற்ப எண்ணிக்கையே.

ஆனால். மிகப் பெரிய பாதிப்பு என்பது சட்டம் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனிற்காக காப்பகத்தில் வைத்திருக்க நீதிமன்றம் உத்தரவிடலாம் என்பதற்கான சட்டப்பிரிவினைக் கொண்டு அவர்களை உறவினர் வசம் ஒப்படைக்காமல் காப்பகம் என்ற பெயரில் சிறை வைத்திருப்பதாகும். மேலும். காப்பகங்களில் எவ்வளவு உயர்தரமான உணவு வகைகள் வழங்கப்பட்டாலும், அந்த பெண்கள் அவர்களது குடும்பத்தினருடன் உண்ணும் பழைய கஞ்சிக்கு ஈடாகாது, குடும்பத்தினருடன் சேர விடாமல் தங்களது குழந்தைகள்-வயதான பெற்றோர்-குடும்பத்திரை பிரிந்து காப்பகங்களில் அடைத்து வைத்திருப்பது என்பது சிறைச்சாலையை விட கொடியதாகும்,

உயர்நீதிமன்றத்தில் பல்வேறு ஆட்கொணர்வு மனுக்கள் விசாரணையின் போது 18 வயது பூர்த்தியடைந்த பெண்கள் அவர்கள் 18 வயது பூர்த்தியடைந்து விட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் தங்கள் பெற்றோரை உதாசீனப்படுத்தி வேறு நபருடன் செல்ல விரும்பினாலும் ஏற்கனவே திருமணம் முடிந்த 40 வயதிற்கும் மேற்பட்ட நபருடன் முறையற்ற வகையில் வசிக்கவே விரும்புவதாக கூறினாலும் உயர்நீதிமன்றம் அறிவுரை மட்டுமே வழங்க இயலும். அதன் பிறகு அவர்கள் விரும்புபவர்களுடன் செல்லவே அனுமதிக்கப்படும் என்று தீர்ப்பளித்துள்ளது.

ஆனால். இதுபோன்ற அம்சங்களை கீழமை நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்ட பெண்களின் விசயத்தில் கருத்தில் கொள்ளாமல், பாதிக்கப்பட்ட பெண்கள் 18 பூர்த்தியடைந்த போதிலும். அவர்களது குடும்பத்தினர் அவர்களை அழைத்துச் செல்ல தயாராக இருந்தும் ஆவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை என்பதற்காக மனுத் தள்ளுபடி செய்யப்படுவது நியாயம்தானா? என்பது தெரியவில்லை.

சமூகத்தின் முன் உள்ள பொறுப்பும் கடமையும்

1, இதுபோன்ற பாலியல் தொழில் வல்லூறுகளிடம் பெண்கள் சிக்குவதை தடுக்கும் வகையில் அந்த பெண்களின் சமூகப் பொருளாதார நிலை மேம்படுவதற்கான தொலைதூர செயல் திட்டம்,

2, தத்தமது இல்லங்களுக்கு அருகே இதுபோன்ற தவறான தொழில் நடைபெறும் பட்சத்தில், நமக்கு எதற்கு வம்பு என்று இருந்துவிடாமல், அதனை தட்டிக் கேட்பதும் அதில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களை மீட்டெடுப்பதும்.

3, அதன் பிறகு அவர்களை அவர்களது உறவினர் வசம் ஒப்படைக்கவும் அல்லது அதற்கு இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்கக்கூடிய வகையில் பாதுகாப்பான குடும்ப சூழ்நிலையில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைப்பதும்.

4, அதன் பிறகு நீதிமன்றங்களில் இலவச சட்ட உதவி மையம் மூலமாகவோ, சமூக சிந்தனையுள்ள வழக்கறிஞர்கள் வாயிலாகவோ அவர்களை அவர்களது உறவினர்கள் வசம் ஒப்படைக்க தகுந்த உத்தரவினை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதலும்.

5, ஏற்கனவே ஓர் ஆண்டு காலம் காப்பகத்தில் வைத்திருக்க கீழமை நீதிமன்றம் இட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்து அவர்களுக்கு உரிய பரிகாரம் பெற்று தருதல்.

ஆக இதுபோன்ற பெண்களை காப்பாற்றி. அவர்களை பாதுகாக்க வேண்டியது காலத்தின்





# திருவனந்தபுரத்தில் முஷ்ரிஃப் ....?

**நூலாசிரியர் : 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?**

## திருவனந்தபுரத்தில் 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? நூல் வெளியீட்டு விழா

“இந்தியாவை ஆரியவர்த் இந்து ராஷ்டிரமாக ஆக்கிட - சங்கப் பரிவாரத்தினர், பல்வேறு சதி திட்டங்களைந் தீட்டி வருகின்றனர். அதில் மிகவும் தலையானது, ஆங்காங்கே தீவிரவாத தாக்குதல்களை நடத்துவது, இதன் மூலம் முஸ்லிம்களிடமிருந்து நாட்டுக்கு மிகப் பெரிய ஆபத்து இருக்கின்றது. என்றொரு பிரம்மையை உருவாக்குவது இந்த பிரம்மையை உருவாக்கிய பின், ஆங்காங்கே தீவிரவாத தாக்குதல்களை மீண்டும், மீண்டும் நடத்துவது. குண்டுகளை வெடிக்கச் செய்வது, மும்பை தாக்குதல் போன்ற தாக்குதல்களை நடத்துவது, பழியை சிறுபான்மை முஸ்லிம்களின் மேல் போடுவது. இந்துக்கள் அனைவரும் தங்கள் பக்கம் இருப்பது போல் காட்டிக்கொள்வது.

இது முதல் சதி (Conspiracy) என்றால், அடுத்தக் கட்ட சதி : IB என்ற மத்திய உளவுத் துறையைக் கொண்டு தாங்கள் வெடிக்கச் செய்யும் குண்டுகள் தாங்கள் செய்யும் பெரிய, பெரிய தாக்குதல்கள், இவற்றின் விசாரணை சரியான திசையில் சென்று கொண்டிருந்தால் அதை திசைத் திருப்புவது. இப்படி பல குண்டுவெடிப்புகளை நடத்திய இந்துத் தீவிரவாதிகளைக் காப்பாற்றி இருக்கின்றார்கள். அந்தப் பழியை வெற்றிகரமாக முஸ்லிம் இளைஞர்களின் மீது போட்டிருக்கின்றனார்கள். அவர்களின் வாழ்க்கையைப் பாழாக்கி இருக்கின்றார்கள். இஃது இரண்டாம் கட்ட சதி. இதுவும் IB என்ற மத்திய உளவுத் துறையின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது. அடுத்த கட்ட சதியாக மீடியாக்கள் என்ற ஊடகங்களில், தாங்கள் விரும்பும் செய்தியைக் கொண்டு வந்து விடுவது. அதற்குத் தகுந்தாற் போல “சிடி”க்கள் என்ற குறுந்தகடுகளைத் தயாரித்துத் தந்து விடுவது. மும்பைத் தாக்குதலில் இவர்கள் எப்படியெல்லாம் செய்திகளைத் திசை திருப்பினார்கள் என்பதை நான், ஒரு குறுந்தகடாக இந்த நூலில் இணைத்துள்ளேன்.

இது மூன்றாம் கட்ட சதி என்றால் நான்காம் கட்டமாக, உள்துறைக்கு தவறான தகவல்களைத் தந்து, உள்துறையையும் IB இன் தகவல்களையே உள்வாங்கி, அதையே வாந்தி எடுக்கும் வகையில் செய்து விடுவது. இது நான்காம் கட்ட சதி!

அடுத்து நீதிமன்ற நடவடிக்கைகளில் தலை இடுவது. நீதிமன்றங்களைக் கொண்டு தாங்கள் யார் யாரைத் தண்டிக்க வேண்டும் என விரும்புகின்றார்களோ, அவர்களைத் தண்டித்து விடுவது.

அடுத்துத் தாங்கள், எடுக்கும் முயற்சிகளுக்குக் குறுக்கே வருபவர்களைக் கொலை




செய்து விடுவது. தாங்கள் எடுக்கும் முயற்சி என வருகின்ற போது, மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது. இந்தியாவை ஆரியவர்த் ஹிந்து ராஷ்டிரமாக மாற்றுவது என்பதாகும்! இந்த வகையிலே தான் ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்தார்கள்.

ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்ததற்கான முக்கிய காரணம். அவர் இந்தியாவில், தீவிரவாத செயல்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள், இந்துத்துவ தீவிரவாதிகள் தான் என்பதை முதன் முதலில் கண்டுபிடித்து அறிவித்தவர். இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிட மிகப் பெரிய சதிகள் நடந்து கொண்டிருக்கின்றது என்பதையும் கண்டுபிடித்து அறிவித்தவர் அவர்தான்.

இத்தோடு கலோனல் புரோகித் - என்ற நமது இராணுவ தளபதிகளில் ஒருவர் பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசி தயானந்த பாண்டே என்ற இன்னொரு ஆண் சந்நியாசி ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தவர்.

அத்தோடு இன்னும் பல பிரபல்யங்களையும் கைது செய்திட இருந்தார். மட்டுமல்லாமல், ‘IB’ என்ற மத்திய உளவுத் துறையைச் சார்ந்தவர்களையும் கைது செய்திட இருந்தார். இதனால் நடத்தப்பட்டது தான் மும்பைத் தாக்குதல். அதில் தான் ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டார்.

இந்து ராஷ்டிராவுக்குக் குறுக்கே நின்றார் ஹேமந்த் கர்கரே என்பதனால் அவர் கொலை செய்யப்பட்டார்.

அதே போல் இப்போது உண்மைகளை வெளியே கொண்டு வருபவர்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். இந்த வகையில் தான் அண்மையில் பூனாவை அடுத்துள்ள ஊராகிய கோல்காப்பூரில் “கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்” என்ற நூலை அறிமுகப்படுத்திட பிரம்மாண்டமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த, கோவிந்த் பன்சாரி கொலை செய்யப்பட்டார்.

**பதவி உயர்வு**

அதேபோல், கர்கரே கொலை செய்யும் இடத்திற்கு அனுப்பி வைத்த இரகுவான்ஷி என்ற அப்போதைய மும்பை காவல்துறை ஆணையருக்கு, அதிக வசதி, சம்பளம் இவற்றைக் கொண்ட விமானத்தள பாதுகாப்புப் படையில் இடம், பதவி உயர்வு தரப்பட்டது.

அதே போல் தான், இராகேஷ் மாரியா என்ற முன்னாள், தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவருக்கு மத்தியில் பதவி உயர்வுத் தரப்பட்டுள்ளது.

இந்த இராகேஷ் மாரியா சாதாரணமாகவே பல முஸ்லிம் இளைஞர்களைப் பொய் வழக்குகளில் இணைக்கவும், கொலைச் செய்திடவும் காரணமாக இருந்தவர்.

வீரமகன் ஹேமந்த் கர்கரே கொலைச்



ஆரியவர்த் ஹிந்து ராஷ்டிராவை உருவாக்க நமது இராணுவத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்த கலோனல் பிரசாந்த் புரோகித் இன் நெருங்கிய நண்பர். இவர் தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராக இருந்த போது தீவிரவாதத் தடுப்புப் படையினருக்குப் பயிற்சிகளைத் தந்திட கலோனல் பிரசாந்த் புரோகிதைப் பலமுறை அழைத்திருக்கின்றார். இந்தப் பின்னணிகளில் தாம்

செய்யப்படு போது மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராக இருந்தார்.

அதற்குமுன் இந்த மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராக இந்த இராகேஷ்மாரியா இருந்தார். இவர், பல பள்ளிவாசல்களில் வெடித்த குண்டுகளில் இறந்து போன முஸ்லிம்கள், காயம் பட்ட முஸ்லிம்கள் இவர்கள் மீதே வழக்குத் தொடர்ந்தார். இதனால் இவர் மீது ஐயங்கள் காவல் துறை வட்டாரத்திலும், மக்கள் மன்றத்திலும் எழுந்தன. முஸ்லிம்கள் இதனை தொடர்ந்து எதிர்த்து வந்தார்கள்.

இந்த நிலையில் தான் நந்தேதில் கொண்டேஸ்வர் என்ற பஜ்ரங்தள உறுப்பினரின் வீட்டில் பல குண்டுகள் வெடித்தன. இந்த குண்டுகள் அவற்றைச் செய்து கொண்டிருக்கும் போது தான் வெடித்தன. இந்த குண்டுகளை பஜ்ரங்தள் என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்த, நான்கு பேர் தான் செய்து கொண்டிருந்தார்கள். குண்டுகள் வெடித்ததில் அவற்றைச் செய்து கொண்டிருந்த இரண்டு பேர் இறந்தார்கள். இரண்டு பேர் பயங்கர காயங்களுடன், உயிர் பிழைத்தனர். இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். மருத்துவமனையில் வைத்து வழங்கிய வாக்குமூலத்தில் குண்டுகளை நாங்கள் அதே மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த அவ்ரங்காபாத்-இல் ஒருபள்ளிவாசலில் வைத்திடவே செய்தோம் எனச் சொன்னார்கள்.

ஆனால் இந்த நந்தேத் குண்டு வெடிப்பை, புலனாய்வுச் செய்த அப்போதைய தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவர், இராகேஷ்மாரியா வெடித்தது பெறும் பட்டாசு தான் என கதைக்கட்டி, அறிக்கைகளைத் தாக்கல் செய்து கொண்டிருந்தார். இந்த இராகேஷ்மாரியா

இவரிடமிருந்து இந்தப் பதவி அதாவது தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவர் பதவி பிடுங்கப்பட்டு, வீரமகன் ஹேமந்த் கர்கரே இடம் ஒப்படைக்கப்பட்டது.

## மீண்டும் ராகேஷ் மாரியா

இப்போது கர்கரே கொலை செய்யப்பட்ட மறு நிமிடமே இதே இராகேஷ் மாரியா மீண்டும் தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் பதவியில் அமர்த்தப்பட்டார். இதனால் அவர் புலன் விசாரணையைத் தினமும் திருப்பும், வேலைகளைத் தாராளமாகச் செய்தார்.

அவருக்கும் இப்போது, பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஆக, இந்துத்துவாவை, ஆதரித்தால் வளங்கொழிக்கும் வாழ்வு, எதிர்த்தால் சாவு என உளவுத்துறை விதி வகுத்துச் செயல்படுகின்றது!

இதற்கு முன்னர் திரு,எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய கர்கரேவை கொலை செய்தது யார்? என்ற நூலையும் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியாகவே இது அமைந்தது.

நிகழ்ச்சியில் வேர்கள் பதிப்பகத்தின் காப்பாளர் மு.குலாம் முஹம்மது அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் ஜனாப்.எம்.எம் ஹசன், முன்னாள் அமைச்சர் (கேரளா), அட்வகேட். கே. சந்திரிகா (முன்னாள் மேயர்- திருவனந்தபுரம்), வழக்கறிஞர் ஷாநவாஸ் உசேன், பீமாபள்ளி அப்துல் ரஷீது அவர்கள் (ஐ.யூ.மு.லீக்) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஐ.யு.எம்.எல்-ஐ சேர்ந்த சகோ. முஜிப் மற்றும் சகோ. சாகுல் ஹமீது அவர்கள் நிகழ்ச்சியின் வெற்றிக்கு உழைத்தார்கள்.

# பத்து ஆண்டுகளுக்கு முன்.....
# இதே மாதம் இதே நாட்களில்.....



## DMK bends for MNP, Intelligence officer transferred

Jaya Menon , Jaya Menon : CHENNAI, AUGUST 7, Tue Aug 08 2006, 01:37 hrs

Like 0 | Tweet 0 | G+ 0 | SU 0 | Reddit 0 | Share 0

TOP STORIES

Bulandshahr gangrape: Minor victim moves SC, seeks FIR against Azam Khan

NSG row behind them, Chinese FM Wang Yi holds talks with PM Modi, Sushma Swaraj

Behind attack on BJP leader Brijpal Teotia: 8 murders & a plot

Appointment of judges: Break logjam soon or we will step in, CJI tells govt

Sania Mirza-Rohan Bopanna one win away from Rio 2016 Olympics

In a bid to appease the Manitha Neethi Pasarai (MNP) (Human Justice Forum), which is alleged to have terror links, the DMK government has ordered an Assistant Commissioner in the state Intelligence Wing to be transferred out of the communally-sensitive Coimbatore district.

The AC, V Ratnasabapathy, went public with his allegation that the MNP was behind the plan to launch terror attacks in the textile town. In the early hours of July 22, Coimbatore police arrested five suspected members of the MNP, and seized IEDs and detonators besides "surveillance notes and maps from them. Police said the five had planned to blow up the Coimbatore Government Hospital, the railway station, the collectorate and the district police office.

The same day, Ratnasabapathy addressed the media, detailing the terror plan by the youths. Barely a week after the episode, the state government issued orders, transferring him to nearby Ooty as DSP, District Crime Branch.

பத்து ஆண்டுகளுக்கு முன்.....இதே மாதம் ....

அன்று மிரட்சி.இன்று மகிழ்ச்சி.

22.07.2006 அன்று NDTV என்ற ஆங்கில செய்தி தொலைக்காட்சியும் எல்லா தமிழ் செய்தி தொலைக்காட்சிகளும் பரபரப்பாக ஒரு செய்தியை வெளியிட்டன.

கோவையில் ஏழு இடங்களில் குண்டு வைக்க சதி. **MNP** யினர் ஐந்துபேர் கைது என்பதே அந்த செய்தி.

MNP என்ற மனித நீதிப் பாசறை இது போன்ற ஈனத்தனமான செயல்களுக்காக உருவாக்கப்பட வில்லை. முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நிறுத்தி நீதியை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட அமைப்பு.

கோவையில் நடந்தது என்னவென்றால் .....

கோவை சிறைவாசிகளை காணச்சென்ற அவர்களின் குடும்பப்பெண்களிடம் சோதனை என்ற பெயரில் அத்துமீறி நடந்துள்ளார் ரத்தின சபாபதி என்ற உளவுத்துறை அதிகாரி.

இதனால் தாங்கவொண்ணா மனவேதனைக்கு ஆளான சிறைவாசிகளின் குடும்பப்பெண்கள் கோவை மாவட்ட MNPயினரிடம் புகார் கூறினர்.

அதன் மாநிலத்தலைவர் மு. குலாம் முஹம்மது மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்தார்.

புகாரை ஏற்று ரத்தின சபாபதிக்கு தாக்கீதுகள்

அனுப்பியது ஆணையம்.இதனால் கோபமடைந்த அவர் MNP ஐ பழிவாங்கத்துடித்தார்.

கோவையின் பரபரப்பான ஏழு முக்கிய இடங்களில் குண்டுகள் வெடிக்க அவரே ஏற்பாடு செய்தார்.பழியை MNP மீது போட்டார்.

பத்திரிக்கைகளுக்கு செய்தி தந்து பரபரப்பை கூட்டினார்.

மெல்லாத வாய்க்கு அவல் கிடைத்து போல் பொல்லாத மீடியாக்களுக்கு இது கிடைத்தது.

"MNP க்கு தடை?" "சென்னையிலுள்ள ஐந்து முக்கிய தலைவர்கள் விரைவில் கைது.தனிப்படை விரைந்தது".என்றெல்லாம் பீதியைக்கிளப்பின.

இந்தக்கெடுபிடியிலிருந்து மீள மூன்று முயற்சிகள் நடந்தன.

ஒன்று; கோவை ஐக்கிய ஜமாஅத் காவல்துறை ஆணையரை சந்தித்தது."1998 குண்டுவெடிப்புக்கு பின் அரும்பாடு பட்டு நாங்கள் கட்டி எழுப்பிய சமூக ஒற்றுமையை காவல்துறையே சிதைக்கலாமா?"என்று துணிந்து கேட்டது.

இரண்டு; வைகை சட்ட நிறுவனம் தன் "உண்மை கண்டறியும் குழு"மூலம் உண்மையை கண்டு பிடித்து பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தியது

மூன்று;MNPயின் தலைவர் குலாம் முஹம்மது சென்னையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி ரத்தின சபாபதியை தோலுரித்தார்.

முத்தாய்ப்பாக அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை சந்தித்து உண்மையை விளக்கிட முயன்றோம்.TKS இளங்கோவன் உதவினார்.

MNP யின் தலைவர் குலாம் முஹம்மது, செயல் தலைவர் உமர் கத்தாப், நான்(இல்யாஸ் ரியாஜி) முதலிய பொறுப்பாளர்கள் முதல்வரை சந்தித்து உண்மையை சொன்னோம்.

முதல்வர் கலைஞர் ஒரு நடுநிலையான விசாரணையை நடத்தி கோவையில் குண்டு வைக்க முயற்சித்த உளவுத்துறை அதிகாரி ரத்தின சபாபதியை பணிமாற்றமும் இடமாற்றமும் செய்து நீதியை நிலை நாட்டினார்.

இதை பொறுக்க முடியாமல்"திமுக MNP யிடம் வளைந்து விட்டது"என்று செய்தி வெளியிட்டு கலைஞரை சீண்டியது Indian express பத்திரிக்கை. அதன் சூழ்ச்சி வலையில் அவர் விழவில்லை. நீதி வென்றது. சூழ்ச்சி தோற்றது.

“உளவுத்துறையின் சதியிலிருந்து எப்படி மீளப்போகிறார்கள் இவர்கள்” என்று அன்று மிரட்சியடைந்த நம் நலம் விரும்பிகள் பலர் இன்று மகிழ்ச்சியுடன் அதை நினைவு கூர்ந்து சிலாகிக்கின்றனர்.

எல்லாப்புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே..!

- கே.எம்.இல்யாஸ் ரியாஜி



# கற்காலம் ஒரு வரலாற்று பொய்

தொடர் 7



சமகால பரிணாமவியலாளரான லூயிஸ் லீகே ( Louis Leakey) என்பவர் கூறும் பழங்கால மனிதனின் அன்றாட வாழ்வை பற்றிய உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்.

இருபது அல்லது முப்பது ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய குகைவாழ் மனிதர்களின் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை சிறிது நேரம் கற்பனை செய்வோம்.

ஒரு கற்கால வேட்டைக்காரன் பள்ளத்தாக்கின் வழியே வேட்டைக்கு செல்கிறான். தனக்கு மேலே உள்ள செங்குத்தான மலையில் ஒரு குகை வீட்டை காண்கிறான்.

எச்சரிக்கையுடனும், மிகுந்த கவனத்துடனும் அதன் மீது ஏறுகிறான். பயம் அவனை பற்றிக் கொள்கிறது. அது ஒருவேளை வேறு சில கற்கால மனிதர்களின் இருப்பிடமாக இருக்கலாம். அவர்கள் அவனது வருகையை எதிர்த்து சினம் கொள்ளலாம். அல்லது அது ஒரு சிங்கம் அல்லது கரடியின் வாழ்விடமாக கூட இருக்கலாம். இறுதியாக அதை நெருங்குகின்றான். அங்கே யாருமில்லை என உறுதி செய்கிறான். பின்பு அதனுள் நுழைகிறான். முன்பு வாழ்ந்த இடத்தை விட இவ்விடம் தனக்கும் தனது குடும்பத்திற்கும் பொருத்தமானது என முடிவு செய்கிறான். தனது குடும்பத்தை அழைத்து வர செல்கிறான்.

அக்குடும்பம் புதிய வீட்டில் குடியேறுகிறது. பழைய வீட்டில் இருந்து கவனமாக கொண்டு வரப்பட்ட கொள்ளிக்கட்டைகளின் மூலம் நெருப்பை பற்ற வைக்கிறான். அல்லது மரக்கட்டைகளை பயன்படுத்தி நெருப்பு மூட்டுகிறான். (எந்த முறையை பயன்படுத்தி பழங்கால மனிதன் நெருப்பை உண்டாக்கினான் என்று நம்மால் உறுதியாக கூற முடியாது. ஆனால் குகை,மலை வாழ் இருப்பிடங்களில் வசிப்பவர்களுக்கு அடுப்பாங்கரை தேவைக்காக நெருப்பு பயன்படுத்தப் படும் என்று நமக்குத் தெரியும்.

படுக்கைகளை தயாரித்து அதில் உறங்குவதற்காக, புற்களையும் தாவரங்களையும் சேகரிக்க அக்குடும்பத்தில் சிலர் செல்கின்றனர். காட்டுப் புதர்களுக்கு சென்று தாவரங்கள், செடிகளின் கிளைகளை முறித்து அதைக் கொண்டு தனது வீட்டின் முன்புறம் சுவரைப் போன்று எழுப்புகின்றனர்.



பல வகையான காட்டு மிருகங்களின் தோல்களும், வீட்டு சாதனங்களும் அப்புதிய வீட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன. இப்பொழுது அக்குடும்பம் சௌகாரியமான நிலையை அடைந்து தினசரி வேலைகளை ஆரம்பம் செய்கிறது. ஆண், பெண்ணின் உதவியுடன் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுகிறான். பழங்களையும், உலர்கனி மற்றும் வேர்களையும் சேகரிக்கின்றான்.



போதனைகளையும் பிரச்சாரங்களையும் செய்கிறார்களே தவிர அவர்களுடைய எண்ணம் இதை தெளிவு படுத்த வேண்டும் என்பதல்ல.

எந்த வித ஆதரவான சான்றுகள் இல்லாத போதும் தங்களுடைய கூற்றை நிரூபிக்க மேற்சொன்னதைப் போல உதாரணங்களை தான் பரிணாமவியலாளர்கள் மேற்கொள்கிறார்கள். புதிய கண்டுபிடிப்புகளை அவர்கள் குழப்பமான முறையில் விளக்கினாலும் அவை அவர்களுக்கு ஓர் உண்மையை சொல்கின்றன. அது, மனிதன் அவன் தோன்றிய நாளிலிருந்தே மனிதனாகத்தான் வாழ்கின்றான்.

மேலே கூறப்பட்ட செயல்முறைகள் அறிவியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சொன்னவை அல்ல. இவை அதன் ஆசிரியரின் முழு கற்பனை. கிடைக்கப்பெற்ற சில எலும்புத் துண்டுகளை வைத்து கொண்டு பரினாமவியலாளர்கள் இதை போன்ற கதைகளை அறிவியல் வார்த்தைகளோடு அவிழ்த்து விடுகிறார்கள். (உண்மையில் புதை படிம குறிப்புகள் பரிணாம மாற்றங்கள் நடைபெற்றன என்று உணர்த்தவில்லை. மாறாக அதற்கு நேர் எதிரானதையே உணர்த்துகின்றது) பழங்கால மனிதன் எதெற்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டான், அவனுடைய தினசரி வாழ்க்கை எவ்வாறு இருந்தது, தங்களுக்கிடையே வேலைகளை அவர்கள் எவ்வாறு பகிர்ந்து கொண்டார்கள் என்பதை பற்றிய உறுதியான விபரங்களை புதை படிம எலும்புத் துண்டுகள் தரவில்லை.

எனினும் இம்மாதிரியான எண்ணற்ற கதைகளையும், வரைபட விளக்கங்களையும் கொண்டே மனித இன பரிணாமக் கதைகள் பரிணாமவியலாளர்களால் செறிவூட்டப்படுகின்றன. இந்தக் கோட்பாட்டை முன்மொழிந்த நாளிலிருந்தே அவர்களால் இப்பரிணாம கோட்பாட்டிலிருந்து வெளியே வர இயலவில்லை.

புதுப்புது விளக்கங்களை அளிக்கின்றனர். நாகரீக முதிர்ச்சியற்ற மனிதன் முன்பு ஒரு காலத்தில் இருந்தான் என நம்ப வைப்பதற்கு அறிவுத்திறனும், கலைத்திறமைகளும் எல்லா காலத்திலும் சமமாகவே இருந்திருக்கின்றன.

நமக்கு முன் வாழ்ந்தவர்கள் நாகரீக முதிர்ச்சியற்றவர்களோ, பாதி மனிதன் பாதி மிருகம் போன்ற படைப்போ கிடையாது. அவர்களும் நம்மைப் போன்று சிந்தித்தார்கள், பேசினார்கள். கலைகளை உருவாக்கினார்கள். கலாச்சார, அறிவியல் கோட்பாடுகளை வளர்த்தார்கள். இதை பின்வரும் தொல்லியல், புதை படிம ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகள் எந்த வித சந்தேகமுமின்றி நிரூபணம் செய்கின்றன நமது நாகரீகத்தில் இருந்து எவை மிஞ்சியிருக்கும்?

நூறு ஆயிரம் வருடத்திற்கு பின்னர் நமது சிறந்த நாகரீகத்தில் இருந்து எவை எவை மிஞ்சியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். நம்முடைய கலாச்சார சேமிப்புகளான ஓவியங்கள், சிலைகள், மாளிகைகள் எல்லாம் மறைந்து விடும். நமது இப்போதைய தொழில் நுட்பத்தின் சில சாயல்கள் மட்டுமே மிஞ்சும். தேய்மானங்களுக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் இயற்கை சூழ்நிலையின் காரணமாக மாறத் தொடங்கும்.உலோகங்கள் துருப்புடிக்கும். கட்டிடப் பொருள்கள் அழிந்து விடும். நிலத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வசதிகள் உருக்குலைந்து போகும். எல்லாப் பொருள்களுக்கும் பராமரிப்பு தேவைப்படும். இப்போது எண்ணிப் பாருங்கள் பத்தாயிரம்

வருடங்கள் கழிந்துவிட்டது. தொடர் மழை, வெள்ளங்கள். சுழல் காற்றுகள், நில அதிர்வுகள் ஏற்பட்டு அனைத்துப் பொருள்களும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும். ஒருவேளை செதுக்கப்பட்ட கற்களும், கட்டிடத்திற்கு பயன் படுத்திய பெரிய கற்களும் மட்டுமே மிஞ்சும். நமக்கு முந்தியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிலைகளின் பாகங்களை போன்று நாம் பயன்படுத்திய சிலைகளின் பாகங்கள் மிஞ்சும்.

அல்லது ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் உலகின் மற்ற பகுதிகளில் வாழ்ந்த பழங்குடிகளின் உயர்ந்த கலாச்சாரங்களின் அன்றாட வாழ்க்கைகளை புரிந்து கொள்வதற்கு தேவையான உறுதியான தடயங்கள் எஞ்சாமல் போகியிருக்கலாம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் இப்போது பெற்றிருக்கும் தொழில்நுட்பங்களில் (தொலைக்காட்சி, கணினி, மைக்ரோவேவ் அடுப்பு போன்றவைகளில்) இருந்து எந்த தடயமும் மிஞ்சப் போவதில்லை. ஒருவேளை கட்டிடங்களின் சில பகுதிகளும் கற்சிலைகளின் சிதிலங்களும் மட்டுமே எஞ்சியிருக்கும். எதிர்கால விஞ்ஞானிகள் இவற்றை கண்டு விட்டு நமது சமூகத்தவர் அனைவரும் பின்தங்கிய கலாச்சாரத்தில் வாழ்ந்ததாக கூறினால் அது உண்மைக்கு புறம்பானது தானே?

அல்லது ஒருவர் சீனர்களின் ஆட்சி மொழியான மண்டாரின் எழுத்துகள் அடங்கிய ஒரு படைப்பை கண்டுபிடிக்கிறார். அந்த எழுத்தின் வடிவத்தை ஆதாரமாக கொண்டு, சீனர்கள் விசித்திரமான குறியீடுகளை தகவல் பரிமாற்றத்திற்கு பயன்படுத்தியுள்ளனர். ஆதலால் அவர்கள் பின் தங்கிய வகுப்பினர் என்ற முடிவுக்கு வருவாரேயானால் இம்முடிவு உண்மையா?

உதாரணமாக அகஸ்தே ரோடின் (Auguste Rodin) உருவாக்கிய (தி திங்கர்) “சிந்தனையாளர்” சிலையை எடுத்துக் கொள்வோம். இச்சிலையை இன்றிலிருந்து சுமார் பத்தாயிரம் வருடங்களுக்குப் பின் தொல்லியல் நிபுணர்கள் கண்டுபிடிக்கிறார்கள் என எடுத்துக் கொள்வோம். அந்நிபுணர்கள் நம் சமூகத்தின் நம்பிக்கைகள், வாழ்க்கை நடைமுறைகள் இவைப் பற்றி ஒரு முற்புனைவை கொண்டிருந்தாலும் அல்லது போதுமான வரலாற்று ஆவணங்கள் இல்லாமையால் அவர்கள் இச்சிலையைப் பற்றி பல விதமான விளக்கங்களை தரக்கூடும். நம் சமூகம் அந்த மாதிரியான சிந்தனை செய்யக்கூடிய சிலையை வணங்கி இருக்கிறார்கள் என்றும் இச்சிலை புராண கதைகளில் வரும் கடவுள் என்றும் கற்பனை செய்யக்கூடும்.

இன்று நமக்கு நன்றாகவே தெரியும் அச்சிலை அழகை, கலைத் திறமையை பறைசாற்ற உருவாக்கப்பட்டது என்று. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு பின் தோன்றும் ஆராய்ச்சியாளர்கள் போதிய தகவல் இல்லாமையால் தங்களுடைய சொந்த முடிவுக்குத் தான் வரக்கூடும். அவர்கள் மேற்சொன்ன உண்மையான தகவலை பெற்றுத் தந்துவிடுவார்கள் என்பது சாத்தியமில்லாதது. எனவே பெறப்பட்ட தகவலை எந்த வித முன் முடிவுமின்றி மதிப்பீடு செய்வதும், மேலும் தவறான கருத்துகள் உருவாக்குவதை தடுத்து விசாலமான கண்ணோட்டத்துடன் சிந்தனை செய்வதும் மிக முக்கியமானது.

நமக்கு முன் சென்றோர்கள் நாகரீக முதிர்ச்சியற்றவர்கள் என்று கூறுவதற்கு நம்மிடம் எந்த வித ஆதாரமும் கிடையாது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பரிணாம தத்துவத்தை முன்மொழியும் ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள் இவர்களால் சொல்லப்பட்டதே ஆதி கால மனிதன் நாகரீக முதிர்ச்சியற்றவன் என்ற கருத்து.

உதாரணமாக குகை சுவர்களில் காணப்படும் மிருகங்களுடைய படங்களை குகை மனிதன் வரைந்த நேர்த்தியில்லாத வரைபடங்கள் என வகைப் படுத்தபடுகின்றன. எனினும் இவ்வரைபடங்கள் அக்கால மனிதனின் கலைத் திறமையின் புரிந்துணர்வை சொல்கின்றன.

மிக நவீன ஆடை அணிந்த ஒரு கலைஞர் அதை கலைநயத்துக்காக மட்டுமே அந்நேரத்தில் தயாரித்திருப்பார்.

உண்மையை கூறின் குகை வரைபடங்கள் நாகரீக முதிர்ச்சியற்ற மனிதனால் வரைந்திருக்க முடியாது என்றே அறிவியலாளர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Manndady, Chennai 600 001.
Editor: M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2,
Kitabath Khan bhadhur Street, Chennai 600 002.